# இளவேனில்



கேசி தமிழ் மன்றம்
இதழ் 19- தை 2021
Casey Tamil Manram Inc
ISSN 2200-789X

## பார்வைக்கு

| | | |
|---|---|---|
| சஞ்சிகை | : | இளவேனில் - 19 |
| வெளியீடு | : | 17 தை 2021 |
| வெளியீடுவோர் | : | கேசி தமிழ் மன்றம் |
| ஆசிரியர் குழு | : | சத்தியா & சத்தியன் |
| வடிவமைப்பு | : | ச.சத்தியன் |
| அட்டைப்படம் | : | விபுஷனா தீபன் |
| தொடர்புகட்கு | : | Editor@caseytamilmanram.org.au<br>PO Box 2516<br>Fountain Gate, Vic 3806 |

## பொருளடக்கம்


- *ஆசிரியரின் உள்ளத்திலிருந்து* 1
- *தலைவர் உள்ளத்திலிருந்து* 2
- *வரும்பொங்கல் நல்ல வரமெனவே அமையட்டும்!*
- *சூரியன் உதிக்கும் திசை - மேற்கு?* 4
- *சங்கடம் தந்த 2020!* 5
- *மாற்றம் ஒன்றே மாறாதது* 6
- *புலம்பெயர் வாழ்க்கை* 7
- *ரோசா செடியும் கள்ளி மரமும்* 10
- *ஜம்பு மரம்* 10
- *நீ நீயாக இரு* 11
- *மகாத்மா காந்தி* 11
- *இணையவழி பயிலரங்கம்!* 12
- *இயற்கை நீயே தனி அழகு!* 12
- *கணனி* 13
- *மகாத்மா காந்தி, பறவை, என் அப்பா* 14
- *கொறோனா 19* 15
- *மகாத்மா காந்தி* 15
- *அம்மம்மா* 16
- *ஆசை* 16
- *வாக்களிப்பு ஒரு சிறந்த குடிமகனின் தலையாய கடமையாகும்* 17
- *கல்வியின் சிறப்பு* 18
- *மனச் சுத்தம்* 19
- *தை பிறந்தால் வழி பிறக்கும், தானாக விடியல் வரும்* 20
- *வாசிப்பு பழக்கத்தை வளர்த்தல்* 21
- *நான் கண்ட கனவு!* 22
- *காகத்தின் மகிமை* 23
- *சித்த மருத்துவத்தில் மூலிகைகளின் பங்களிப்பும் முக்கியத்துவமும்* 24
- *சுவாமி விவேகானந்தரின் சீரிய பொன்மொழிகள்* 27
- *டொக்ரர் மாமா* 28
- *முயலும் ஒட்டகச்சிவிங்கியும்* 29
- *தமிழ் சமுதாயத்தின் ஒரு சில குறுகிய மனப்பான்மைகள் இரண்டாம் தலைமுறையை பாதிக்கின்றது* 30.
- *நான் யார்?* 33
- *முத்தான மூன்று எழுத்துக்கள்* 35
- *நான் விரும்பும் மாற்றம்* 35
- *திருக்குறள் சொல்லும் மனம், பகுத்தறிவு,, சித்தம்* 36
- *என்.ஜி.கே (NGK) பட விமர்சனம்* 41
- *பெண்கள் உலகின் கண்கள்* 42
- *பெண்ணின் பெருமை* 43
- *கர்வபங்கம் - உருவகக் கதை* 44
- *விடுதலை* 46
- *உயர்ந்த பாலத்தில் விரிந்த பார்வை* 47
- *அம்மாவின் "ஒரு ஊர்ல ஒரு ராஜகுமாரி"* 48
- *கூடைப்பந்து* 50
- *ராம்* 51
- *எங்கள் தமிழ் பாடசாலை* 52
- *அம்மா* 52
- *எனது இலங்கைப் பயணம்* 53

# ஆசிரியரின் உள்ளத்திலிருந்து….

கோவிட் 19, எமது வாழ்க்கைப் பயணத்தை மாற்றியமைத்த காரணி. இன்று உலகம் முழுவதும் உள்ள பேரரசுகளே செய்வதறியாது ஸ்தம்பித்த வேளையிலும், நமது அவுஸ்திரேலிய அரசாங்கமானது திறம்பட செயற்பட்டு இவ் அசாதாரணச் சூழலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தமைக்கு முதலில் எனது பாராட்டுக்கள். இதுவே இன்றைய எமது தமிழர் திருநாள் நிகழ்ச்சியினை கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு சிறிதளவில் வெளியரங்கிலும், இணைய வழியிலும் இணைந்து நடாத்த உதவியுள்ளது. அவுஸ்திரேலியாவில், கேசி தமிழ் மன்றத்தினால் முதன்முறையாக தமிழர் திருநாளை இணையவழியில் கொண்டாடுவதில் மிகவும் மகிழ்ந்துள்ளோம். இம் முயற்சிகள் யாவும் தமிழ் மொழியை வாழவைக்கவும், அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லவும் உதவும் என நம்புகின்றோம்.

எழுத்துத் திறமையுள்ளவர்களின் ஆக்கத்திறமையை வெளிக்கொணரவே இவ் இளவேனில். அவர்களுக்காக இளவேனில் இம்முறை இணையப் புத்தகமாக வெளிவருகிறது. உங்களுக்காக தவழும் தரை, பயிலும் முற்றம், படைப்பு மேடை, சந்திக்கும் வாயில் என பல களம் அமைத்துள்ளது இம்மலர். அதில் அனைவரும் தங்களது ஆக்கங்களை எழுதி தங்களையும் ஒரு தமிழ் எழுத்தாளராக இந்த புலம் பெயர்ந்த நாட்டில் நிலை நிறுத்தவேண்டும்.

ஒவ்வொரு வருடமும் இளவேனிலுக்கு ஆதரவு தருவோர், எழுதுவோர் எண்ணிக்கை பெருகி வருவதை காண்கின்றோம். இதழுக்கான ஆக்கங்கள் பல இடங்களில் இருந்து வருகின்றன. இதுவே இந்த இதழுக்கான வெற்றியாக இருக்கின்றது. இவ் வெற்றி தொடரவேண்டும். உங்களது ஊக்கம் எமக்கு தொடர்ந்து கிடைக்க வேண்டும். தமிழும் தமிழரும் தம்மை தொடர்ந்து அடையாளப்படுத்த இது போன்ற இதழ்கள் தொடரும்.

இச் சஞ்சிகைக்கு தொடர்ந்தும் உங்கள் ஆதரவை வழங்கி அரையாண்டிற்கு ஒரு முறை வெளிவரும் இதழினை இனிவரும் காலங்களில் காலாண்டுக்கு ஒன்று என்று வெளியிடும் நிலைக்கு கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். வாசகர்களாகிய உங்கள் ஒவ்வொருவரின் ஆதரவிலும் இளவேனில் சஞ்சிகை சிறப்பான வெளியீடாக வெளிவரும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் கிடையாது.
" தமிழ் எங்கள் மொழி! உரக்கச் சொல்வோம். தமிழ் எங்கள் அடையாளம்! நிலைக்கச் செய்வோம்"

நன்றி!
ஆசிரியர் குழு.

தலைவரின் உள்ளத்திலிருந்து ......

வெற்றிகரமான பதினோராவது அகவையில் அடியெடுத்துவைக்கின்ற கேசிதமிழ் மன்றமானது இன்றைய இந்த அசாதாரணமான சூழ்நிலையிலும் அதைக் கருத்தில் கொண்டு இந்த நாட்டின் சட்டதிட்டங்களுக்கு அமைவாகவும், பொதுமக்களின் நன்மையைக் கருத்தில் கொண்டும் மிகவும் அடக்கமான முறையில் கடந்த வருடம் போன்று விக்டோரிய மானிலத்தில் இயங்கும் பல சமூக அமைப்புகளின் ஒத்துழைப்புடன், ஒருகூட்டு முயற்சியாக இன்றைய தமிழர் திருநாளை மிகவும் சிறப்பான ஒரு நிகழ்வாக கொண்டாடுகின்றது.

இதன் பொருட்டு விக்டோரியா தமிழ் மூத்த பிரசைகள் தோழமைக் கழகம், ஆஸ்திரேலிய தமிழர் கலையகம், ஆஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலை சங்கம், யாழ்ப்பாணம் இந்து கல்லூரி பழைய மாணவர் சங்கம், ஹாட்லி கல்லூரி பழைய மாணவர் சங்கம், விக்டோரிய தமிழ் மூத்த பிரசைகள் காருண்யக் கழகம், பாடும் மீன் பழைய மாணவர் சங்கம்-விக்டோரியா, மெல்பேர்ண் முத்தமிழ் மன்றம், மெல்பேர்ண் தமிழ் சங்கம், வடக்கு புலிகள் சமூக அமைப்பு, சங்கத் தமிழ் கலையகம், தமிழர் ஆஸ்திரேலியா, தமிழ் கொன்சோற்றியம்-விக்டோரியா, Tamil Graded Readers Inc.,தமிழ் பெண்கள் கலாச்சார ஒன்றியம் இவர்களுடன் கேசி தமிழ் மன்றமும் ஒன்றிணைந்து காலத்தின் தேவை கருதி அடக்கமாக அதேநேரத்தில் விரும்பியவர்கள், முடிந்தவர்கள் நேர்முகமாக மண்டபத்திலும், நேரில் சமூகமளிக்க முடியாதவர்கள், மற்றும் வெளிநாட்டில் வாழும் அனத்துத் தமிழ் உறவுகளும் பார்த்து மகிழும் விதமாக இணையவழியிலும் பார்வையிட்டு மகிழும் விதமான ஒழுங்குகளை செய்து நடத்திவருகின்றார்கள்.

இந்நிகழ்வானது ஊரெல்லாம் கூடிப் பலபானைகளில் பொங்கி மகிழும் நிகழ்வாகக் கடந்த வருடங்களில் நடந்திருந்ததுபோன்றமையாது தற்போதைய சூழ்நிலை காரணமாக குறைந்தளவு பானைகளில் பொங்கல் நடந்தாலும், மண்டபத்தில் எமது தமிழர் கலாச்சாரத்தின் பல்வேறு கலை நிகழ்வுகளையும் ஒருங்கமைத்து, அதேபோன்று பல்லின மக்களினது நிகழ்வுகளையும் அத்துடன் இணைத்து, தாயகத் தமிழர்களின் கலைநிகழ்வுகள், பாரம்பரிய தமிழர் விளையாட்டுகள்,கண்காட்சிகள், அங்காடிகள், எனபலநிகழ்ச்சிகளையும் பார்வையாளர்களைக் கவரும்விதமாக அமைந்திருக்கின்றது.இவ்வேளையில் எமது பொங்கல் இதழாக வெளிவரும் இளவேனில் இதழானது 18வது ஆடிப்பிறப்பு இதழ்போன்று இந்த இதழும் இணையவழியில் மலர்கின்றது. இத்தகைய சூழ்நிலையில் அனைவரும் இணையவழி மலரும் எம் இளவேனில் இதழ்களை வரவேற்று வாசித்து, கடந்த காலங்கள்போன்று உங்கள் ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் அளித்து உதவுமாறு வேண்டுகின்றோம். பொங்கல் என்பது நன்றியின் வணக்கம், எங்கும் நிறைந்தால் நன்மைகள் மணக்கும்" எனக்கூறி இந்த ஆட்கொல்லி நோயை அரசின் சட்டதிட்டங்களுக்கு பூரண ஆதரவளித்து அனைவரும் ஒன்று சேர்ந்து இல்லாதொழிப்போம் என இப்புனித நன்னாளில் உறுதிபூணுவோம்.

அனைவருக்கும் இனிய பொங்கல் நல் வாழ்த்துகள் கூறி அமர்கின்றேன்.
அன்புடன்
நவரத்தினம் வைத்திலிங்கம்
தலைவர்
கேசி தமிழ் மன்றம்.

# வரும்பொங்கல் நல்ல வரமெனவே அமையட்டும் !

- மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பர்ன், அவுஸ்திரேலியா.

பட்டாசு சத்தமும் பளிச்சிடும் மத்தாப்பும்
புத்தரிசி புதுப்பானை பொங்கிவரும் வெண் பாலும்
புத்துணர்வு சுமந்துவர பூரிப்பாய் பொங்கல் வர
அத்தனை பேர் அகங்களுமே ஆனந்தம் பெருகிடுமே !

பட்டதுன்பம் அத்தனையும் பஞ்சாகப் பறந்துவிட
பார் பிடித்த பெருநோயும் படுகுழியில் வீழ்ந்துவிட
மட்டற்ற மகிழ்சசியது மனமெல்லாம் நிறைந்துவிட
மங்கலமாய் பொங்கலது வந்துமே அமையட்டும் !

வீண்வாதம் விலகட்டும் வெறுப்புமே மடியட்டும்
மாண்பற்ற செயலெல்லாம் மங்கியே மழுங்கட்டும்
காண்கின்ற அத்தனையும் கண்ணியமாய் ஆகட்டும்
கனிவுதனை பொங்கலது காட்டிடவே வந்திடட்டும் !

வறுமையெனும் வாசகமே வெறுமையாய் ஆகட்டும்
வள்ளலெனும் நல்லார்கள் வளமுடனே வாழட்டும்
தருமமெனும் நல்வார்த்தை தரணியெங்கும் பரவட்டும்
தலைநிமிரப் பொங்கலது தான்வழியைக் காட்டட்டும் !

வயலுழுவார் வாழ்வில் மாற்றங்கள் நிறையட்டும்
வயோதிபர்கள் இல்லம் வழக்கின்றிப் போகட்டும்
மங்கலமாம் வெளிச்சம் மனையெங்கும் பரவட்டும்
பொங்கலது வாழ்வில் புதுப்பாதை காட்டிடட்டும் !

மதுவென்னும் நினைப்பு மனம்விட்டு அகலட்டும்
மங்கையரின் நினைப்பு மாண்நிறை ஆகட்டும்
வாலறிவன் நினைப்பு மனம்முழுக்க நிறையட்டும்
வரும்பொங்கல் நல்ல வரமெனவே அமையட்டும்

# சூரியன் உதிக்கும் திசை - மேற்கு?

-மெல்பர்ன் அரசு

ஒரு நாள் மாலை வேளையில் என்னுடைய மகளிடம் எதேச்சையாக, “சூரியன் உதிக்கும் திசை எது?” என்று கேட்டேன். சட்டென, “மேற்கு” என பதில் வந்தது.

“சரி இருக்கட்டும், அப்படியென்றால் சூரியன் மறையும் திசை எது?”, என்றேன். புன்னகையோடு என்னைப் பார்த்துக்கொண்டே, “கிழக்கு” என்றாள்.

“எப்படிச் சொல்கிறாய்?”, இது நான்.

“சூரியன் எங்கு ‘மேலே’ ஏறுகிறதோ அதுதானேப்பா மேற்காக இருக்கமுடியும். அதே போல எந்த பக்கம் ‘கீழே’ இறங்குகிறதோ அதுதானே கிழக்காக இருக்கமுடியும்?”, என்றாள். என்னால் பதில் சொல்லமுடியவில்லை. புத்திசாலித்தனமான பதிலென்றாலும், தவறு தவறுதானே.

“நீ சொன்னது தவறு, சூரியன் உதிக்கும் திசை கிழக்கு, மறையும் திசை மேற்கு” என அவளைத் திருத்திவிட்டு, பின்னர் தூங்கப்போகும்போது மனதில் அவள் சொன்னதை அசைபோட்டு பார்த்தேன்.

அந்தக் காலத் தமிழர்கள் கிழக்கு மேற்கு என்ற சொல் பயன்பாட்டில் தவறுசெய்து விட்டனரோ? என்ற எண்ணமும் என் மனதில் தோன்றியது. சொற்களை உருவாக்குவதிலும் பயன்படுத்துவதிலும் சங்ககாலத் தமிழர்களைவிட சிறந்தவர்கள் யாருமிருக்க வாய்ப்பில்லை. அப்படி இருந்தும் ஏன்? பிறகு எனக்குத் தூக்கம் வரவில்லை.

மறுநாள் மனதில் சட்டென்று ஒரு சிந்தனைப் பொறி தோன்றிற்று. வரலாற்று ரீதியாக தமிழ்நாடும் மலைநாடும் (கேரளா) ஒன்றாக இருந்தது உண்மை. அக்காலத்தில், மலைநாடு மலை மற்றும் மேல் பகுதியில் இருந்ததினால் அதனை மேற்கு எனவும், தமிழ்நாடு தாழ்ந்த அல்லது கீழ்ப்பகுதியில் இருந்ததினால் அந்த திசையைக் கிழக்கு என்றும் பெயரிட்டனர் என்பதே யதார்த்தமான உண்மை என்பதை உணர்ந்த போது, பெருமூச்சு விட்டேன்.

கேரளாவிற்கு ‘மேனாடு’ என்றவொரு பெயரும் அக்கால வழக்கில் இருந்தது. மேற்கு திசைக்கு ‘குடக்கு’ என்றவொரு பெயரும் உண்டு. நீங்களே கண்டுபிடித்திருப்பீர்கள். அத்திசையில் ‘குடகு’ மலைப்பகுதியிருப்பதனால் அதனை ‘குடக்கு’ என்றும் அழைத்தனர். சங்கப்பாடல்களில் மலையாள நாட்டையாண்ட சேர மன்னர்களை குடக்கோ, குடக்கோன் அல்லது குடநாதன் என்று சொல்வதும் இயல்பு.

அப்படியெனில், வடக்கு, தெற்கு என்ற சொற்கள் எப்படி வந்திருக்கும் என்ற கேள்வி வருவதும் நமக்கு இயற்கைதானே! வடக்கிலிருந்த தெலுங்கு (ஆந்திரா) நாட்டில் 'வடுகர்' என்ற சமூகம் பெருவாரியாக வாழ்ந்ததினால் 'வடக்கு' எனப் பெயர்பெற்றது.

தென்றல் அல்லது தென்னல் என்றழைக்கப்பட்ட மென்மையான காற்று வீசியதால் தெற்கு 'தெற்கு' எனப் பெயர்பெற்றது. தென் என்ற சொல் தேன் என்ற சொல்லிருந்து உருவானது என்பதை நான் உங்களுக்குச் சொன்னால் அது தேனாக இனிக்கிறதல்லவா? ஆகையால்தான் தென்னவர் என்று தமிழர்களை அழைப்பது அக்கால முறை. இனிமையான தமிழன் புத்திசாலி மட்டுமில்லை, அறிஞன்!

என் மனசுக்குள் தென்றல் வீசுவது போன்ற ஓர் உணர்வு! உங்களுக்கு?

## சங்கடம் தந்த 2020!

-சுவேத்தா தர்மசீலன்

ஆறு மாதங்களாய் வீட்டுக்குள்ளே அடைக்கப்பட்டோம்
பள்ளி, வேலை நிகழ்நிலையாக பழக்கப்பட்டோம்
ஒவ்வொரு நாளும் போக போக வெறுத்துப் போனோம்
வருடம் எப்போது முடியும் என்றே காத்திருந்தோம்
2020 வந்தது, போனது வலியும் தந்தது
பிறவியில் புதிய அனுபவம் தந்த வருடமாய் இருந்தது
வெளியே சென்றோம் முகமூடி போட்டு
வெளியே வந்தால் கடைகளும் பூட்டு!
எங்கள் பார்வையில் நண்பர்கள் இல்லை
கணணித்திரையே நட்பின் எல்லை!
இருமல் தும்மல் வந்தால் பயந்தோம்
கைகளை கழுவினோம் கதவை அடைத்தோம்
ஆனால் என்ன? நன்மை கண்டோம் கதவு திறந்தோம்
வாழ்வில் இருக்கும் உண்மைகாணப் பழகிக்கொண்டோம்
பின்னாள் ஒருநாள் திரும்பிப் பாப்போம்
சாதித்தோம் என்று பெருமை அடைவோம்
சந்ததிக்கோர் நாள் வரலாறாகும்
சங்கடம் தந்த 2020!

# மாற்றம் ஒன்றே மாறாதது

-கவிஸ் சண்முகம்

நம் உலகத்தில் உள்ள எல்லா இடத்திலும்வ்வொரு நிமிடத்திலும் மாற்றம் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. இந்த உலகின் ஆரம்பமே ஒரு மிகச் சிறந்த மாற்றம். நம் மனிதர்களின் பரிணாம வளர்ச்சி, விஞ்ஞானத்தினால் நிரூபிக்கப்பட்ட ஒரு மாற்றம். இதை போல் நம் தினசரி வாழ்வில் கூட பல மாற்றங்கள் நடைபெற்று விட்டன, நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, மற்றும் நடைபெறப் போகிறது. நம் அனைவரும் தினந்தோறும் பயன்படுத்திக் கொண்டிருக்கின்ற கை தொலைபேசிகளில் கூட மிகப் பெரிய அளவில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் மாற்றங்கள் எல்லாம் ஒரு பொருளுக்கு மட்டும் நடக்க வேண்டும் என்பது இல்லை. மனிதர்களின் பண்புகளும் பழக்க வழக்கங்களும் மாறியே தீரும்.

தொழில் நுட்பம் இக்கால இளைஞர்களுக்கு நன்கு தெரிந்த ஒரு விடயம். இப்போது இருக்கின்ற தொழில்நுட்பத்தை வைத்து ஒரு மனிதனின் உயிரையே உருவாக்கலாம். அவ்வளவு முன்னேறிவிட்டது. ஆனால் அதே தொழில்நுட்பத்தை கடந்த தலைமுறையில் பார்த்தால் ஏதோ கருப்பு வெள்ளை படம் போல் இருந்தது. இப்போது பயன்படுத்தப்படுகிற கைதொலைபேசிகளை அந்தக் காலத்தின் கைதொலைபேசிகளுடன் ஒப்பிட்டு வைத்துப் பார்க்கும் போது பார்வையிலேயே பல மாற்றங்களைக் காணலாம். அந்த காலத்தில் தொடுதிரை எல்லா கைதொலைபேசியிலும் இல்லை. பெரும்பாலும் ஃபிளிப் தொலைபேசிதான் இருந்தது. ஏன் என்னுடைய முதல் கைதொலைபேசி ஃபிளிப் தொலைபேசிதான்.

இது நிச்சையமாக என் மீது ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. முதலில் இன்றைய சமுதாயத்தில் சிறு குழந்தைகளே மிக விலை உயர்ந்த கைதொலைபேசி வைத்திருக்கும் போது ஒரு உயர்நிலைப் பள்ளிக்கு செல்கிற மாணவனிடம் ஒரு ஃபிளிப் தொலைபேசி இருந்தால், பள்ளியே உன்னை கிண்டலடிக்கும். ஆனால் அதனோடு ஒரு மிக சிறந்த பாடமும் கற்றுக்கொணடேன். ஒரு பொருளை எவ்வாறு நன்றாகப் பார்த்துக்கொள்வது. ஏன் என்றால் நவீன தொலைபேசியின் அற்புதமான குணங்களை நான் ஒரு போதும் முழுமையாகப் புரிந்து கொண்டிருக்க மாட்டேன். அந்த ஃபிளிப் தொலைபேசி என்னிடம் இல்லை என்றால் என்னுடைய நண்பர்கள் அனைவரும் அவர்களுடைய கைதொலைபேசியை பல முறை தூக்கிப் போட்டு உடைத்து, திரை உடைந்த பிறகு அதை பயன்படுத்தினர். எனவே எனது பண்புகள் மாறின.

மாற்றம் என்பது நியதி. “உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலா தார்” என்ற திருக்குறளின் அர்த்தம், ஒருவன் எவ்வளவுதான் படித்திருந்தாலும், மாற்றத்தை அனுசரிக்காதவன், அறிவில்லாதவன் ஆவன். மாற்றத்தை நாம் எல்லோரும் அனுசரிக்க வேண்டும். அப்போதுதான், ஒரு மனிதனால் வளர்ந்து மேன்மை அடைய முடியும்.

# புலம்பெயர் வாழ்க்கை

-சிவயோகராணி

நான் படிக்கும் காலத்தில் உலகில் மிகச்சிறிய கண்டம் அவுஸ்திரேலியா எனப்படித்தபோது, “அட அப்படியா...? “என என்மனதில் ஒரு அதிருப்தி வந்தது. ஆனால், இங்கே வந்து கால் பதித்ததும் முன்பு படித்தது தவறு என நினைக்குமளவிற்கு இந்தச்சிறிய கண்டத்திலே இத்தனை விந்தையா...? இத்தனை அழகா...? என்ன புதுமை...? என நோக்கும் இடமெல்லாம் பச்சைப்பசேல் என்ற வண்ணம் கண்டு வியப்பின் விளிம்பிற்கே சென்று மகிழ்ந்தேன்.

மிதிக்கும் புல்வெளி எங்கும் பூப்பூக்கும் புதுமையைக்கண்டு பூரித்துப்போனேன். நான் பிறந்த ஊரிலே ஒரு ரோஜாப்பூ மலர்ந்தால், அது எனக்கு உலக சாதனை போன்று தென்படும். ஆனால், இங்கே திரும்பும் திசையெல்லாம், பார்க்கும் பக்கம் எல்லாம் வண்ண வண்ண எழில் கொஞ்சும் வகையில் இலையைத் தோற்கடிக்கும் அளவிற்கு ரோஜா மலர்களின் எழிலும், ஏனைய பல்வகை மலர்களின் இணையற்ற அழகும் என் மனதைக் கொள்ளை கொண்ட முதல் விடயமாகும். இத்தகைய நிகழ்வு எனது மனதிற்கும் கண்ணுக்கும் ஒன்று சேர்த்து மிகையற்ற மகிழ்வை உண்டாக்கியது.

எனது தாய் நாட்டிலே, முதுமையோடு இயலாமை இயங்காமை, தனிமை, பொருளாதாரம் பற்றிய கவலையும் கூடவே சேர்ந்து வாட்டத் தொடங்கும். வாழ்க்கையே கேள்விக்குறியதாய் உருவெடுக்கும். ஆனால், இங்கே யாவரையும் விட முதியோரின் முகத்தில் தவறாது தவழும் புன்னகையைக் கண்டு வியந்தேன். பெருமிதம் அடைந்தேன். ஏனெனில், இந்தப் புலம்பெயர் நாட்டிலே முதியோருக்கான மனநிறைவு, ஓய்வூதியம் கிடைப்பது மிகவும் போற்றுதலுக்குரியது.

அத்துடன், வைத்திய வசதிகள் போக்குவரத்து வசதிகள், குடியிருப்பு வசதிகள் போன்றவற்றால், முதியோருக்கான ஒரு உயர்ந்த அந்தஸ்தை அளித்த இந்த புலம்பெயர் நாட்டை பாராட்டாமல், போற்றாமல் இருக்கமுடியுமா...? எதிர்காலம் எப்படியிருக்கும் என்ற கவலையை இல்லாதொழித்து மனதளவிலும் உடலளவிலும் மகிழ்வையும் நிம்மதியையும் அளித்த இந்தப் புலம்பெயர் நாட்டிற்குத் தலை வணங்குகிறேன்.

மேலும் வீதி ஒழுங்குமுறை என்னைப் பிரமிக்க வைத்தது. அங்கே இலங்கையில் பாதசாரிக்கடவையிலேயே விபத்தை ஏற்படுத்தும் நிகழ்வைச் சந்தித்த எனக்கு, இங்கு நடைமுறைப்படுத்தப்படும் வீதி ஒழுங்குமுறையும் - பாதசாரிகளுக்கும் துவிச்சக்கர வண்டிகளுக்கும் பிரத்தியேகப்பாதையும், பாதசாரிக் கடவையில் நாம் நின்றிருந்தால், குறிப்பிட்ட தூரத்தையும் விட பல அடி தூரத்திற்கப்பால் வாகனத்தை நிறுத்துவதும், நாங்கள் காத்திருந்தால் சைகை காட்டி நாம் செல்லும் வரையில் காத்திருந்து வாகனம் செல்லும் மனிதாபிமானம் கண்டு ஆச்சரியமடைந்தேன். மற்றும் அரச பேருந்துகளில் ஒரேயொரு பயணிக்காக

என்றாலும் கட்டாயமாகச் செல்லும் சேவையின் அனுபவத்தை நானும் பெற்றுக்கொண்டேன். பேரூந்து நிறுத்தங்களில் காணப்படும் நேர அட்டவணையில் ஒரு நிமிடம் கூடத் தவறாது சமூகமளிக்கும் உன்னத சேவையை நான் முன்னொருபோதும் எங்கும் எப்போதும் கண்டதில்லை. அனுபவித்ததில்லை. அதே போன்று புகையிரத நிலையங்களிலும் குறிப்பிட்ட நேரத்திற்கு ஒரு விநாடிகூடத்
தவறாது, தாமதிக்காது நடைபெறும் உயர்ந்த சேவையின் ஒப்பற்ற நிர்வாகத் திறன் கண்டு பிரமித்தேன்.

மற்றும் தெரிந்தவர்களோ, தெரியாதவர்களோ எங்களைக் கடந்து செல்லும்போது, புன்னகை பூத்த முகத்துடன் "ஹலோ "எனக் கூறும் போது, பிரிந்திருக்கும் தாய், தந்தை, சகோதரர்கள், உற்றார், உறவினர்கள் நினைவுக்கு வந்து வாடியிருக்கும் பயிர் வான் மழையைக் கண்ட மகிழ்ச்சியும் செழிப்பும் மனதில் ஏற்படுகின்றது. ஒரு சில நிமிட நேர மனிதநேயம் மனதில் பல மணிநேர பரவசத்தை ஏற்படுத்த ஏதுவாயிருக்கிறது. இந்த மகத்தான இனிய பண்பு கண்டு மகிழாமல் இருக்கமுடியுமா...?
மற்றும் நினைத்தவுடன் விரும்பிய இடத்திற்குச் செல்லமுடியாத இக்கட்டான நிலையும்
இங்கே ஏற்படுவதுண்டு. யாதெனில் வாகன வசதியின்றி, இங்கு வாழ்வதும் மிகவும் கஷ்டமே. வாகன வசதிக்காக குடும்பத்தினரை எதிர்பார்க்கவேண்டிய கட்டாய சூழ்நிலைக்குத் தள்ளப்படும் துர்பாக்கிய நிலைக்கு ஆளாக்கப்படுகிறோம். அங்கே எமது தாயகத்தில் நாங்கள் விரும்பிய இடங்களுக்கு சுயமாகவே சென்று வருவதை இங்கிருந்து நினைக்கும்போது மனதில் வாட்டம் வருவதையும் தவிர்க்கமுடியாது. அங்கே எமக்குக் கிடைத்த பலரதும் உதவி ஒத்தாசை, உபசரிப்பு மற்றும் இன சன சம்பந்தம் யாவற்றையும் இழந்து "தனிமரம் தோப்பாகாது" என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு, மனதிற்குள் பொருமுகின்றோம்.

மேலும், அங்கே சந்தோஷங்கள் எங்கள் இருப்பிடத்தை தேடி வந்தது. இங்கே சந்தோஷத்தை தேடி நாங்கள் போகவேண்டியுள்ளது. யாவரும் ஒன்றுகூடல், உடல்பயிற்சி, பலரும் ஒன்றுசேர்ந்து சுற்றுலா செல்தல் ஆகிய நிகழ்வுகள் மூலம் தனிமை வெறுமைக்கு இடமளியாது மனதை மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் ஆக்கப் பழக்கிக்கொண்டோம். முக்கியமாக வைத்தியசாலையில் இலவச சிகிச்சையைத் தந்தும், நோயாளியைக் கவனிக்கும் திறன் நம்மை மெய்சிலிர்க்க வைத்தது. ஏனெனில் இத்தகைய கவனிப்பு பல இலட்சம் கொடுத்தும் முன்னொருபோதும் நாம் கண்டதில்லை. அனுபவித்ததில்லை.

எந்தப் புகழ்பெற்ற வைத்தியரானாலும் காத்திருக்கும் நோயாளியை அவரே வந்து கூட்டிச்செல்லும் மனிதப் பண்பை இங்கே கண்டு மெய்சிலிர்த்தேன். சேவையில் உள்ளவர்களின் கனிவான பேச்சு, இதமான பராமரிப்பு, புன்னகை சிந்தும் முகம், கண்டு பூரித்துப்போனேன். அவசர சேவைக்குப் பயன்படும் "அம்பூலன்ஸ்" சேவையின் துரித செயற்பாடு, முதலுதவிச் சிகிச்சையின்

சிறப்பு கண்டு மனிதாபிமானம் உள்ள எவராலும் பாராட்டாமல், வியக்காமல் இருக்கமுடியாது. அடுத்ததாக இங்கே அவசரத்திற்கு வைத்தியரின் சிபாரிசு இன்றி எந்த மருந்தும் மருந்துச் சாலைகளில் வாங்கமுடியாது. அது மனதிற்கு அதிருப்தியைத் தருகிறது. முன்பு நாங்கள் எங்கள் தாயகத்தில் அவ்வாறு பழக்கப்படவில்லையே...! மேலும் முக்கியமாக நோயின் நிமித்தம் வைத்தியர் சிபாரிசுடன் மருந்து வாங்கச் சென்றால் ஐந்து நாட்கள் எடுக்கவேண்டிய மருந்தென்றாலும் அதற்கேற்றாற்போல் கொடுக்காது பத்து அல்லது இருபது மாத்திரைகள் உள்ள பெட்டியுடன் தருவார்கள். ஐந்து நாட்களில் நோய் குணமடைந்துவிடும். மிகுதியாக இருக்கும் மாத்திரைகள் மாதக்கணக்கில் கையிருப்பில் இருக்கும். அவற்றை பெயர் விபரம் எழுதி பத்திரப்படுத்தி மீண்டும் பல மாதங்களின் பின்னர் அவற்றை பாவிப்பது கஷ்டம் என்பதையும் உணர்கின்றோம்.

மற்றும் கால நிலை மாற்றம் இங்கு எமக்கு மிகவும் பாதிப்பைத் தருகின்றது. தாயகத்தில் பிறந்ததிலிருந்து மிதமான வெப்ப நிலையிலும் அளவான குளிரையும் தாங்கிய எமது உடல், இங்கே ஆயிரம் ஊசிகளை ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் குத்தியது போன்ற உணர்வோடு தாக்கப்பட்டு துவண்டு விடுகின்றோம். ஆனால், மற்றைய நாடுகளைப் போன்று இங்கே பனிக்கட்டியால் சூழப்படும் நிலையையும் அவற்றை அப்புறப்படுத்தினால்தான் வெளியே செல்லமுடியும் என்ற அவசர நிலையும் இங்கே இல்லையென்பது இறைவன் எமக்களித்த வரம் எனலாம். குளிரால் துவண்டுபோகும் நமது உடலையும் மனதையும் புலம்பெயர் நாட்டின் பலவித சலுகைகள், வசதி வாய்ப்புகள் இன்னோரன்ன பலவகைக் காரணங்களும் குளிரைத் துச்சமென நினைத்து நம்மை நிமிர்ந்து நிற்கவைக்கிறது. இங்கேயே நிரந்தரமாக காலூன்ற வைத்துப் பெருமையடையச் செய்கின்றது.

மேலும் பல்பொருள் அங்காடிகளில் தரம் நிறைந்த பொருட்களும், ஒரு குறிப்பிட்ட தினத்திற்குப் பின்னர் அதன் அரைவாசி விலையில் கொள்வனவு செய்து மகிழும் உன்னதமான செயற்பாட்டையும் இங்கே கண்டு வியந்தேன். எத்தகைய இக்கட்டான சூழ்நிலையிலும் சந்தர்ப்பங்களிலும் குறித்த விலைக்கே பொருட்களை இங்கே கொள்வனவு செய்ய முடிகிறது. ஏனெனில் சந்தர்ப்ப சூழ்நிலைக்குத் தகுந்தவாறு பொருட்களை பன்மடங்கு விலைக்கு வாங்கிப் பழக்கப்பட்டவர்கள்தான் நாங்கள். புகலிட நாட்டில் எம்மை வியக்கவைத்த நன்மைகளில் மனதைக் கவர்ந்த விடயங்களில் இதுவும் ஒன்று.

## ரோசா செடியும் கள்ளி மரமும்

-சகுந்தலா கணநாதன்

ஒரு அழகான சிவப்பு ரோஜா செடி கள்ளி மரத்துக்குப் பக்கத்துல வளர்ந்தது காட்டுலே. நான் நல்ல வடிவு என்று கர்வம் பிடித்த பூ மரம் கள்ளி மரத்தோட கதைக்க மாட்டுது என்று சொல்லிற்று.

கோடை காலம் வந்தது. எங்கும் நல்ல வெயில் அடித்தது. ரோசா மரம் தண்ணீர் இல்லாமல் வாடி போனது. குருவி ஒன்று கள்ளியை கொத்தி அதிலிருந்த தண்ணீரை குடித்து தாகம் தீர்த்தது. ரோசா மரம் இதைப் பார்த்துக்கொண்டு இருந்தது. ரோசாவே நீயும் வந்து என்னை கொத்தி என்னுள்ளே இருக்கிற நீரை அருந்து என்று கள்ளி மரம் சொன்னது. உடனே ரோசா மரம் தன் முட்களால் கள்ளி மரத்தை மீண்டும் மீண்டும் குத்த அதனுள்ளே இருந்த நீர் ரோசா மரத்தை நனைத்தது. சில நிமிடங்களில் ரோசா செடி துளிர்த்து எழுந்தது.

அதுமட்டுமல்ல தான் செய்த தப்பை உணர்ந்து தன்னை மன்னிக்கும்படி கள்ளி மரத்திடம் கேட்டது.

ஆகவே நாங்கள் மற்றவர்களை காயப்படுத்த வேண்டாம்.

நண்பர்களாய் உதவி செய்வோம்

அழகு நிரந்தரமானது அல்ல

## ஜம்பு மரம்


-சரோஜினி

என் தங்கையும் நானும் முற்றத்தில் விளையாடிக் கொண்டிருக்கும் சமயம் எங்கள் ஜம்பு மரத்தில் பழுத்த பழங்களை பார்த்தோம். என் தங்கையின் பெயர் செல்வி. அவள் என்னிடம் சொன்னாள் அக்கா நீங்கள் அந்த ஏணியை கொண்டுவந்து மரத்தில் சாய விடுங்கள், நான் மரத்தில் ஏறி பழங்களை பிடுங்கி கீழே போடுகிறேன், அதன்பின் என் தங்கை ஏணியின் உதவியால் மரத்தில் ஏறி பழங்களை பிடுங்கி கீழே போடத் தொடங்கினாள். மரத்திலிருந்தது நாலு பழங்கள் மற்றவையெல்லாம் சிறு காய்கள்.

இப்போ எனக்கு ஒரு குறும்பு புத்தி ஏற்பட்டது. ஒவ்வொன்றாய் நான் சாப்பிட துவங்கினேன் அதுவும் இல்லாமல் செல்விக்கு தெரியாமல் மரத்தின் கீழே சாய்த்து வைத்த ஏணியை தூக்கிச்சென்று வீட்டின் பின்புறத்தில் வைத்து விட்டு வீட்டுக்குள் நுழைந்து விட்டேன்.

என் தங்கை மரத்தின்மேல் இருக்கிறாள் என்பதை மறந்து வானொலியில் பாட்டு கேட்டுக் கொண்டிருந்தேன், செல்வி சத்தமிட்டு என்னை அழைத்தது எனக்கு கேட்கவில்லை, என் தகப்பனார் ஒவ்வொரு நாளும் ஒரு மனிதனை எங்கள் முற்றத்தை கூட்டவும் மரங்களுக்கு தண்ணீர் விடவும் அனுப்பி வைப்பார். என் தங்கையின் குரலைக் கேட்டு அவன் ஏணியை கொண்டு வந்து மரத்தின் அடியில் வைத்து விட்டு பின்புறம் சென்று செடிகளுக்கு தண்ணீர் விட தொடங்கினான்,

என் தங்கை சமையல் கட்டில் சென்று அம்மா சமைக்கும் தின்பண்டங்களை வாயில் போட்ட வண்ணம் அம்மாவுக்கு அழுதுகொண்டு முறையிட்டாள். அவளை சமாளிக்க அம்மா சொன்னாள் உன்னுடைய அப்பா வரட்டும் அக்காவுக்கு ஒரு கிழமை பாக்கெட் மணி கொடுக்க வேண்டாம் என்று நான் சொல்லுகிறேன் என்று சொல்லி என் தங்கையை சமாளித்து அனுப்பி விட்டா. அப்பாடா இந்த தண்டனையே எனக்கு போதும் என்று நான் நினைத்தேன். இனி குறும்புத்தனங்கள் செய்யமாட்டேன் என்று நினைத்துக்கொண்டு என்னையே நான் சமாளித்துக் கொண்டேன். ஆனால் இந்த குறும்பு புத்திகள் என்னை விட்டு விலகவே இல்லை.




## நீ நீயாக இரு

-சாந்தி சந்திரகுமார்

நீ நல்லதே செய்தாலும்
நாளை உன்னை மறந்து விடுவார்கள்...
எனினும் நல்லவனாய் இரு !!!

உண்மையாய் நீ இருந்தாலும்
உலகம் உன்னை ஏமாற்றலாம் ...
எனினும் உண்மையாக இரு !!!

நீ அள்ளி, அள்ளி கொடுத்தாலும்
அவர்கள் அதிருப்தி காணலாம் ...
எனினும் வள்ளலாய் இரு !!!

கனிவோடு நீ இருந்தாலும்
கயவன் என்று குறை கூறலாம் ...
எனினும் கனிவாய் இரு !!!

மனநிறைவோடு நீ இருந்தாலும்
மற்றவர்கள் பொறாமை கொள்ளலாம் ...
எனினும் மன நிறைவோடு இரு !!!

வாழ்க்கை என்பது
நீ சாகும் வரை அல்ல ...
பிறர் மனதில் நீ வாழும் வரை

**இளவேனில் சஞ்சிகைக்கான ஆக்கங்களை**
**அனுப்பிவைக்க வேண்டிய முகவரி :**

**Casey Tamil Manram**
**PO Box 2516,**
**Fountain Gate,**
**VIC 3805**

**மின்னஞ்சல் : editor@caseytamilmanram.org.au**

## இணையவழி பயிலரங்கம்!

*-நவரத்தினம் வைத்திலிங்கம்*

கேசி தமிழ் மன்றத்தின் மூத்தோர் நலன் சார்ந்த செயல்பாட்டின் தொடர்ச்சியாக மூத்தோர்களுக்கு அவர்களின் இன்றைய இத்தவிர்க்க முடியாத சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அவர்கள் அன்றாடம் பயன்பாட்டில் கொண்டிருக்கும் கையடக்கத் தொலைபேசி, லப்டப், ஐபாட் மற்றும் கணணி ஆகியவற்றை எவ்விதம் உபயோகப்பபடுத்துவது எனும் அறிவை அவர்களுக்கு ஊட்டுவதற்காக பிரதி செவ்வாய்க்கிழமை தோறும் மாலை எட்டு மணிக்கு ஒரு பயிலரங்கத்தை கேசி தமிழ் மன்றம் முன்னெடுத்து நடாத்தி வருகின்றது.

அந்த வகையில் கடந்த சில வாரங்களாக நடாத்திய வகுப்புகளில் இணையத்தின் ஆரம்ப அடிப்படை செயல்பாடுகளை விளங்கப்படுத்தி Zoom எனும் செயலியை எவ்விதம் தரவிறக்கம் செய்யவேண்டும், பின்னர் அதனைத் தொடர்பேறப்படுத்தும் வழிமுறைகளை விளங்கச் செய்தனர்.

அதன் தொடர்ச்சியாக கடந்த 13ம் திகதி பயிலரங்கில் இலங்கையிலிருந்து அத்துறையிலே அறிவுசார்ந்த திரு. அமிதாயன் அவருடன் திரு துஷ்யந்தன் ஆகியோரை இணையவழி மூலம் தொடர்பேற்படுத்தி, அவர்கள் மூலம் பங்குபற்றிய மூத்தவர்களுக்கு அவர்கள் தமது கைத்தொலைபேசியில் எவ்விதம் தமிழ் செயலியை தரவிறக்கம் செய்வது, தரவிறக்கம் செய்தபின்னர் தமிழ் எழுத்துக்களை எவ்விதம் தட்டச்சு செய்வது என்பதை திரையிலே செயல்முறைப் பயிற்சியாக செய்து காட்டினார்கள். அங்கத்தவர்கள் நன்கு விளங்கிக்கொள்ளும் விதமாக மிகவும் ஆறுதலாகவும், பொறுமையாகவும் மூன்று தடவைகள் அவர்கள் செயற்பட்டதும் பாராட்டுக்குரியது. தமிழ் மொழி மூலம் எவ்விதம் தம் தொடர்புகளை முன்னெடுக்கலாம் எனும் வழிமுறையை விளங்கவைப்பதற்காக எழுத்தாணி எனும் தமிழ் உருச் செயலியையே அவர்கள் தரவிறக்கஞ் செய்து காட்டினார்கள்.

வானலையில் கலந்து பொறுமையாகவும், விளக்கமாகவும் பயிலரங்கை நடாத்தி வைத்த இருவருக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

இவற்றையெல்லாம் ஒருங்கமைத்து வரும் கேசி தமிழ் மன்றத்தின் நிர்வாக சபையினருக்கும் நன்றி கலந்த பாராட்டுகள் உரித்தாகுக

## இயற்கை நீயே தனி அழகு!

-சுவாதி தர்மசீலன்

குளுகுளு காற்று ஓரழகு!
சலசல பாயும் நீர் அழகு!
கலகல ஒலியில் வளையல் அழகு!
சட சட பெய்யும் மழை அழகு!
கொக்கரக்கோ சேவல் அழகு!
கூ கூ பாடும் குயில் அழகு!
ஸ் ஸ் இரையும் தேனீ அழகு!
தக தக சூரியன் ஓரழகு!
கம கம மல்லிகை பேரழகு!
பள பள மின்னும் பனி அழகு!
இயற்கை நீயே தனி அழகு!

# கணனி

-ஆட்ரி

கணனி என்பது தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் ஓர் இயந்திரம். அது நம் வாழ்வை பல வகைகளில் எளிமையாக்குகிறது.

நாம் கணனி மூலமாக இணயத்தளத்தை பயன்படுத்தலாம். நமக்குத் தேவையான கணக்குகளை செய்யலாம். இக்காலச் சூழ்நிலையில் வீட்டிலேயே கணனி மூலம் பாடங்கள் படிக்கலாம். கணனியில் படம் வரையலாம். அவற்றை அச்சிடலாம்.

கணனியில் திரை, விசைப்பலகை, சுட்டி (mouse), கட்டுப்பு அலகு (CPU) ஆகிய பகுதிகள் உண்டு. நாம், கணனியில் குறிப்புகளை சேமிக்கலாம். அவற்றை தேவையான நேரத்தில் எடுத்து பயன்படுத்தலாம்.

கணனியை சார்ல்ஸ் பாபேஜ் என்பவர் 1833ம் ஆண்டு கண்டுபிடித்தார். தற்போது நாம் பயன்படுத்தும் கணனி பல தலைமுறை வளர்ச்சிகளைக் கண்டது. நாம் இப்போது மிகவும் நவீன மயமாக்கப்பட்ட கணனிகளைப் பயன்படுத்துகின்றோம். இன்று இவை தொலைத் தொடர்பில் மிகவும் முக்கிய பங்காற்றுகின்றன.

கணனியை அதிகமாகப் பயன்படுத்தினால் கண்களுக்கு பாதிப்பு வரும். கணனியில் தெரியாதவர்களுடன் பேசினால் அது நம் வாழ்க்கையைப் பாதிக்கின்றது. கணனியின் இணைய தளத்தில் பொய்களும் உண்மைகளும் இருக்கும். நாம் அதில் உண்மைகளைத்தான் அறிய வேண்டும். கணனியை அதிக நேரம் பயன்படுத்துவதால் நாம் நேரத்தை வீணாக்குகின்றோம். கணனியில் இணையத்தளத்தில் விளையாட்டுகள் எப்போதும் விளையாடினால் மூளையை பாதிக்கும். ”அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு” எனவே நாம் கணனியை கட்டுப்பாட்டுடன் பயன்படுத்த வேண்டும்.

## இளவேனிலில் எழுதுங்கள்

அன்புள்ள அண்ணாக்களே
அன்புள்ள அக்காக்களே
தமிழ் வகுப்பு தம்பி தங்கைகளே
உங்கள் இளவேனில் எழுதுங்கள்
உங்கள் ஆக்கங்களை
உங்கள் ஆக்கங்களை
அனைவரும் பார்ப்பதற்கு
அழகாக எழுதி அனுப்பிடுவீர்

மறக்காமல் அனுப்பிடுவீர்
தைபிறக்க வழிபிறக்கும்
நாம் எல்லாம் படித்து மகிழ
இளவேனில் எம் கையில்
தவழ்ந்து வரும்
இன்னும் ஏன் தாமதம்
இன்றே அனுப்பிடுவீர்
நன்றே செய்திடுவீர்

## மகாத்மா காந்தி

இந்திய நாட்டு சுதந்திரற்காக போராடிய தலைவர்களில் மகாத்மா காந்தியும் ஒருவர்.

மகாத்மா காந்தி 1869ம் ஆண்டு ஐப்பசி மாதம் இரண்டாம் திகதியில் பிறந்தார். அவரின் தாயின் பெயர் புட்லிபாய் காந்தி. அவரின் தந்தையின் பெயர் கரம்சந்த் காந்தி. மகாத்மா காந்திக்கு இரண்டு சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் உள்ளனர். அவர்களின் பெயர், லக்ஷ்மிதாஸ் கரம்சந்த் காந்தி, ரலிதாபெஹான் காந்தி, பங்கன்வர்பென் காந்தி, கர்சந்தாஸ் காந்தி மற்றும் முலிபென் காந்தி.

தெரியுமா? மகாத்மா காந்தி இந்திய வழக்கறிஞராக இருந்தார்.

சஹானா சுரேஷ்குமார்
நன்றி!

## பறவை



இது ஒரு பறவை.
பறவை வானத்தில் பறக்கும்
பறவைக்கு இறகு உண்டு.
பறவை பழங்களை உண்ணும்.
எனக்கு பறவை மிகவும் பிடிக்கும்

ஆக்கம்
தக்சேகா ரஜேஸ்குமார்

## என் அப்பா

என் அப்பாவின் பெயர்
கலைச்செல்வன்.
அவர் அன்பானவர்.
அப்பா என் உடன்
விளையாடுவார்.
எனக்கு அப்பாவை பிடிக்கும்.

கார்த்திகன்
வயது 5

## கொறோனா 19

-புஸ்பா சிவபாலன்

நான் ஒரு ஆட்கொல்லி கிருமி.
எனக்கு உலகமக்கள் வைத்த பெயர் கொறோனா 19.
கொறோனா, நீ கண்ணுக்கு தெரியாத ஒரு கிருமி.
உன் தாக்கத்தால் மனிதருக்கு மனிதர் பயப்பட வேண்டியுள்ளது.
இந்த கலியுக காலத்தில் அநீதியும் அழிவும் நிறைந்து இருப்பதால் பூமி தாங்கவில்லையோ என நினைக்க வேண்டியுள்ளது.
கொறோனா, உன்னால் மட்டும் பூகோளத்தில் கோடிக்கணக்கான மக்களை கொல்ல முடிகின்றது.
எமது அநுபவ ரீதியில் நீதான் தற்பொழுது எமக்கு பொறுமை, அடக்கம், கட்டுப்பாடு என்று மறந்தவற்றை நினைவூட்டினாய்.
அதற்கு நன்றி.
உன்னால்தான் கணிணியில் உன்னைப்பற்றி முதன்முதல் தமிழில் எழுதுகின்றேன்.
என்னை தமிழில் எழுத ஊக்குவித்த உனக்கு நன்றி.
எம் மத்தியில் மறைந்து கொண்டு போகும் அன்பு, பாசம், தனித்துவம், வாழ்க்கை முறைகள் போன்றன மறைந்து போகும் நிலையில், நீ இவற்றை நினைவூட்டினாலும் நீ ஆட்கொல்லிதானே!
உன் வரவால் எம் உறவுகளை, நின்மதிகளை இழந்து விட்டோம்.
முதலில் நீ வந்த வழியை பார்த்து போ.
ஏ கொறோனா நீ போ.
எங்களை வாழ விடு.
கொறோனா 19!

## மகாத்மா காந்தி

-சஹானா சுரேஷ்குமார்

இந்திய நாட்டு சுதந்திரத்திற்காக போராடிய தலைவர்களில் மகாத்மா காந்தியும் ஒருவர்.
மகாத்மா காந்தி 1869ம் ஆண்டு ஐப்பசி மாதம் இரண்டாம் திகதியில் பிறந்தார்.
அவரின் தாயின் பெயர் புட்லிபாய் காந்தி.
அவரின் தந்தையின் பெயர் கரம்சந்த் காந்தி.
மகாத்மா காந்திக்கு இரண்டு சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் உள்ளனர்.
அவர்களின் பெயர்,
லஷ்மிதாஸ், கரம்சந் காந்தி, Laxmidas Karamchand Gandhi
றலியத்பென் காந்தி Raliatbehn Gandhi
பங்கன்வர்பென் காந்தி Pankunvarben Gandhi
கர்சந்தாஸ் காந்தி Karsandas Gandhi
முலிபென் காந்தி Muliben Gandhi
தெரியுமா? மகாத்மா காந்தி இந்திய வழக்கறிஞராக இருந்தார்.

## அம்மம்மா

-யுவர்ணிகா ரமேஸ்

அம்மா என்று அறிமுகம் ஆனவரே
அம்மாவின் அன்பையும் சேர்த்து
தந்தவரே.!

அம்மாக்கு நிகர் அம்மம்மா என்ற
புதிய மொழியை சொல்ல வைத்தவரே
காலமெல்லாம் கண்ணுக்குள் இமையாக
என்னைக் காத்தவரே
ஆராரோ பாட்டில் ஆயிரம் கதை
சொன்னவரே.!

ஆயிரம் புத்திமதிகள் அன்புடன்
கூறியவரே
என்னை ஆதரவாய் அரவணைப்பவரே
நான் தோற்கும் போதும்
நம்பிக்கை தந்தெனை ஊக்குவிப்பவரே.!

ஒற்றுமையின் ஒளி விளக்கு
ஒன்றாக குடும்பத்தை வைத்தவரே.!

அம்மம்மாவின் அன்பு, அக்கறை
குளத்தில் இருக்கும் அழகிய தாமரை
மலர்கள் போன்றதே எப்போதும்
நனைந்து
கொண்டே இருக்குமே..!

ஆயிரம் வலிகளும்
அடுக்கடுக்காக துன்பங்களும்
வந்தாலுமே
அம்மம்மாவின் ஆறுதலான
ஒரு வார்த்தை போதுமே.!!

எத்தனை சோகங்கள் என்
மனதை வதைத்தாலுமே
அத்தனையும் அம்மம்மாவின் மடியில்
தலை வைத்து உறங்கினால்
அத்தனை சோகங்களும்
அகன்று ஓடி விடுமே.!

அம்மாவின் அம்மா அம்மம்மா
அணையாத தீபமம்மா
இல்லத்தை அலங்கரித்திடும் அற்புதமே
இளையவர் எமக்கான வழித்தடமே
இனிய சொற்களை இயம்பும்
அறிவாலயம்
காலத்திலும் அரிய முதுமைப்
பொக்கிஷம்
கண்களில் தெரிகின்ற தெய்வம்
எண்ணங்களில் நிறைந்த எளிமையின்
சிகரமே
எங்கள் அம்மம்மா!!!

## ஆசை

-சபரீசன் முகுந்தன்

தமிழைப் படித்து
தமிழனாய் வாழ ஆசை
தமிழன் என்று சொல்லி
தலை நிமிர்ந்து வாழ ஆசை
கொரனா ஒழிந்து
பட்டாம் பூச்சியாய்
பறந்து திரிய ஆசை
விஜய் ரீவியில்
விஜய் படம் பார்த்து
விஜய் போல
நடனம் ஆட ஆசை
காரில் சென்று
கடற்கரை பார்த்து
வர ஆசை
தமிழை கற்றிட ஆசை
தமிழை பேசிட ஆசை
தமிழை எழுதிட ஆசை
தமிழனாய் வாழ்ந்திட ஆசை

# “வாக்களிப்பு ஒரு சிறந்த குடிமகனின் தலையாய கடமையாகும்”

-அபிதாரணி சந்திரன்

உலக நாடுகளை சரியாக ஆட்சி செய்து, மக்களுக்கு நன்மையை அளிக்க முன்வருபவர்களை நாம் சரியாக தேர்வெடுப்பது அவசியமாகும். அரசியல் வளர்ச்சியில் உலக நாடுகளை ஒப்பிடும் போது வாக்களித்தல் மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. ஒரு நாட்டை வழிநடத்துவதற்கு சட்டங்கள், உரிமைகள் சமமாக வழங்கப்பட வேண்டும். அவற்றைத் தந்து நாட்டின் மகிமைகளை மெருகேற்றுவதற்கு பொறுப்புள்ள தலைவரை ஆதரித்து, தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்தி, வாக்களிப்பது மிகவும் முக்கியம்.

கட்சிகளின் சார்பாக பொறுப்புகளை ஏற்று நிற்கும் பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பது ஒரு கஷ்டமான விடயம் அல்ல. ஆனால் அதை அவதானமகத் தேர்ந்தெடுப்பது மிக மிக முக்கியம். நாம் செய்யும் ஒரு சிறிய விடயமே நமது நாட்டினுடைய எதிர்காலத்தை திசைதிருப்பும். ஒரு நாட்டை மக்களுக்கு சார்பாக ஆட்சி செய்யும் ஒரு சிறந்த தலைவனை தேர்ந்தெடுக்கும் பொழுது, அவரது கொள்கைகளை அவதானித்து, மக்களுக்கு நன்மையைப் பயிர்க்கிறார்களா என பார்த்து அவரை தெரிவு செய்வது நாட்டின் நிலையை பாதிக்கக்கூடும். உலகளாவிய ரீதியில் பார்த்தோம் என்றால், நாடுகளுக்கு ஏற்ற தலைவர்களைப் பார்க்க முடிகிறது. தமது பதவிக்கு ஏற்றவர்களா என்றும் தெரிகிறது. தனது நாட்டு மக்கள் சிறப்பாக வாழவேண்டும் என்று நினைக்கும் கட்சிப் பிரதிநிதிகளை உன்னிப்பாக தேடவேண்டிய நிலமை வந்துவிட்டது. நாட்டு மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம், இவர்களது நடவடிக்கைகளில் இருக்கிறதா என்பது ஒரு கேள்விக்குறியாக இருக்கிறது. நமது தமிழர்களுக்கே இது தெரிந்த விடையமாக உள்ளது. ஈழத் தமிழர்கள் பட்ட அவஸ்தையை, அந்த நாட்டுத் தலைவர் நிறுத்தியிருக்கலாம். அதை தூண்டியதே அவர்கள் தானே. கடந்த வருடம் அமெரிக்கா நாட்டில் கறுப்பினத்தவர்களுக்கு எதிராக நடந்த துன்புறுத்தலைப் பற்றி நாம் அனைவரும் அறிவோம். ஜோர்ஜ் ஃப்லோய்ட் என்ற பெயர் உலகம் முழுவதும் ஒலித்தது, ஆனால் அந்த நாட்டு பிரதமருக்கு மட்டும் கேட்கவில்லை. ஒரு சிறந்த பிரதிநிதியாக இருந்தால், தனது மக்களது நலத்தைக் கருதி மட்டுமே நடவடிக்கைகளை எடுப்பார். ஆகவே நாம் ஒரு தலைவரது கொள்கைகளைக் கருதி, ஆட்சிக்கு அவர்களை தேர்ந்தெடுக்கவேண்டும்.

வாக்களித்தல் ஒரு முக்கிய விடயம் அல்ல என்று பலர் யோசிப்பார்கள். ‘ஆயிரத்தில் ஒருவனாக இருக்கும் எனது வாக்கு முக்கியம் அல்ல,’ என்று பலர் நினைப்பார்கள். ஆயிரத்தில் ஒருவனாக இருந்தாலும் கூட, அந்த ஆயிரதில் இருக்கும் அனைவரது வாக்கும் எண்ணப்படும். இது பல உதாரணங்களால் நிரூபிக்கப் பட்டுள்ளது. அமெரிக்கவில் தாய்மொழி ஆங்கிலமா, ஜேர்மன் மொழியா என்ற கணக்கெடுப்பில், ஒரே வாக்கினால் மட்டுமே ஆங்கிலம் முடிவானது. பிரான்ஸில் இராணுவ ஆட்சியா

மக்கள் ஆட்சியா என்ற கணக்கெடுப்பில் மக்களாட்சி ஒரே வாக்கினால் வென்றது. ஹிட்லெர் நாசி படையின் தலைவராகியது ஒரே வாக்கினால் தான், வாஷிங்டன் அமெரிக்காவுடன் இணைந்தது ஒரே வாக்கினால். இந்த ஒரு வாக்கு எவ்வளவு முக்கியம் என்பதை நாம் அறியக்கூடியதாக இருக்கிறது. இந்த ஒரு வாக்கு இருக்காமல் போயிருந்தால் உலகம் வேறு திசையை நோக்கி சென்றிருக்க வாய்ப்புகள் உள்ளன. எனவே ஒவ்வொரு வாக்கும் வெகுமுக்கியமாக இருக்கிறது என்பதை நாம் அனைவரும் அறிந்திருக்க வேண்டும்.

எனவே, வாக்களிப்பின் முக்கிய்த்துவத்தை நாம் இப்பொழுது அறிந்திருப்போம். ஒரு வாக்கு அடுத்து 5 வருடங்களுக்கு தலையோங்கி நின்று, ஒரு நாட்டின் ஆட்சியை முடிவு செய்யும். ஒவ்வொரு வாக்கும் மிக முக்கியமாக இருக்கிறது. “இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள்.” ஒரு மகத்தான நாட்டுக் குடிமகனாக திகழ்ந்து வாக்களிப்பது அவசியமானது.

## கல்வியின் சிறப்பு

-திவ்வியா தேவபாலன்

கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே என்றார் ஒரு சிறந்த முதியவர். இவ்வரிகள் கல்வியின் சிறப்பைக் காட்டுகின்றது.

"கண்ணுடையர் என்பவர் கற்றோர்
முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்"

என்கிறார் வள்ளுவர். கல்வி அறிவில்லாதவர் மிருகத்திற்கு ஒப்பானவர் என்றும் கூறுகின்றார். எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்று ஔவையார் கூறியிருக்கின்றார். எம் நூல்களின் கருத்தை விழங்குவதற்கு நாம் எழுத்துக்களை முதலில் தெரியவேண்டும். கல்வியின் அடிப்படை எண்ணும் எழுத்தும் ஆகும்.

கல்வி அழியாத செல்வம். செல்வம் கொடுக்கும்பொழுது குறைந்துகொண்டே போகும் ஆனால் கல்விச்செல்வம் கொடுக்கும்போது பெருகிக் கொண்டே வரும். கல்வியானது வெள்ளத்தால் அழியாது வெந்தழலால் வேகாது வேந்தராலும் கொல்ல இயலாது. எனவே என்றும் நாம் கல்வியை கற்றிடவேண்டும்.

“கற்க கசடற” என்றார் வள்ளுவர். நமது வாழ்க்கையில் நல்ல நூல்களை தெளிந்து கற்றிட வேண்டும். “சீனாவுக்குச் சென்றேனும் கல்வியை கற்றுக் கொள்! “என்றார் முகம்மதுநபி. நாம் பள்ளத்தை நாடி ஓடும் வெள்ளத்தைப் போல கல்வியை பெற்றிட வேண்டும். கல்வி ஆரோக்கியமாக வாழ பயன்படுத்தக்கூடிய அறிவைத் தரும் இதுதான் கல்வியின் சிறப்பு எனக் கூறுவார்கள்.

# மனச் சுத்தம்

-சாருகா சிவசுதன்

நானும் அப்பாவும் புகையிரத நிலைய மேடையில் கால் வைத்தோம். பயணிகள் கூட்டம் கூட்டமாக புகையிரதத்தின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். நான் சுற்றிப் பார்க்கும்போது இந்த சிறிய இடத்தில் பெருமளவு மக்கள் இருந்ததை அவதானித்தேன். அவர்களில் பலர் முகக் கவசம் போட்டுக் கொண்டுதான் இருந்தார்கள். முகக்கவசம் அணிந்து இருப்பது மிகவும் அந்தரமாக இருந்தது. அப்படி இருந்தாலும் நான் மகிழ்ச்சியாக இருந்தேன். அப்பா இருக்கையில் அமர்ந்து ஒரு புத்தகத்தை வாசிக்கத் தொடங்கினார். கூரையிலிருந்து ஒரு சமிக்கை தொங்கியது அதில் ஒரு நிமிடத்தில் புகையிரதம் வரும் எனக் காட்டியது. இதனால் நான் தண்டவாளத்தை ஆவலாக நோக்கினேன். அதனை அவதானித்த அப்பா புத்தகத்தை மூடிவிட்டு என்னை நோக்கி நடந்து வந்தார். விளிம்பிற்கு கிட்ட நிற்காமல் பின்னால் வா எனக் கூப்பிட்டர். நான் சில அடிகள் பின்னோக்கி நடந்தேன். அந்த நேரம் அங்கே வந்து சேர்ந்த புகை வண்டியைப் பார்த்து நான் வாய் பிளந்தேன். அதுதான் முழு வண்டி என்று நினைத்தபோது இன்னும் பல பெட்டிகள் ஒன்றின் பின் ஒன்றாக வந்தன. எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. எல்லா பெட்டிகளின் கதவுகளும் திறந்த போது எல்லா மக்களும் முண்டியடித்துக் கொண்டு ஏறினார்கள்.

அப்பா எனது கையை பிடித்துக் கூட்டிக்கொண்டு சென்றார். எங்களோடு அந்தப் பெட்டிக்குள் இருக்கும் மக்களை சுற்றிப் பார்த்தேன். எங்களையும் சேர்த்து கிட்டத்தட்ட 10 பயணிகள் இருந்தார்கள் பெட்டியின் பின் மூலையில் 2 வயோதிபர்கள் அமைதியாக இருந்தார்கள். அவர்களுக்கு எதிர்புறமாக 2 இளைஞர்கள் தங்களுக்குள் கதைத்துக் கொண்டிருந்தார்கள். எங்கள் பக்கத்தில் மூன்று பேர் இருந்தார்கள்.

முதலாவதாக ஒரு நடுத்தர வயதுடைய பெண் அவரின் நண்பியுடன் தொலைபேசியில் கதைத்துக் கொண்டிருந்தார், அவருக்குப் பின்னால் ஒரு இளமையான ஆண் இருந்தார். அப்பா எனக்குப் பக்கத்தில் புத்தகம் வாசித்துக் கொண்டு இருந்தார். ஆனால் எனக்கு செய்ய ஒன்றும் இல்லை ஆகவே நான் கண்ணாடி வழியே வெளியே இருக்கும் காட்சியை பார்த்தேன். தம்பி வந்திருந்தால் நாங்கள் ஒரு விளையாட்டு விளையாடி இருக்கலாம் என யோசித்தேன். நாங்கள் புகையிரத நிலையத்தில் இருந்து ஐந்து நிமிடத்துக்கு முன்னர் தான் புறப்பட்டோம் ஆனால் நாங்கள் ஏற்கனவே காட்டுக்கு ஊடாக பயணித்துக் கொண்டிருந்தோம்.

புகைவண்டி ஐந்து நிமிடத்திற்கு ஒருமுறை புகையிரத நிலையங்களில் பயணிகளை ஏற்றி இறக்குவதற்காக நின்றது. சிறிது நேரத்தில் நான் ஒரு மிகவும் வித்தியாசமான விடயத்தை அவதானித்தேன். இந்த வண்டியில் ஏறிய மக்கள் எல்லோரும் நாங்கள் இருந்த பகுதியில் வந்து தான் இருந்தார்கள். ஆனால் அந்த ஆசியப் பெண்ணை தவிர்த்து மற்ற பக்கம் முழுவதும் வெறுமையாக இருந்தது. இறுதியில் நான் அதைப் பொருட்படுத்தாமல் விடுவதற்கு முடிவு செய்தேன். திரும்பவும் கண்ணாடி வழியே பார்த்தேன் இந்த தடவை காட்சி முழுமையாக மாறிவிட்டது. பக்கத்தில் பழைய உலோகத்தால் ஆன வேலி ஒன்று இருந்தது. அதற்கு பின்னால் ஒரு கைவிடப்பட்ட நடைபாதை இருந்தது.

அடுத்த புகை வண்டி நிலையத்தில் இன்னும் பல மக்கள் எங்கள் பெட்டியில் ஏறினார்கள். இவர்கள் எல்லோரும் எங்கள் பக்கத்துக்கு வந்தபடியால் விரைவில் இருக்கைகள் எல்லாம் பாவிக்கப்பட்டன. ஆகவே பல மக்கள் நிற்கத் தொடங்கினார்கள் ஆனால் எனக்கு ஒரு விடயம் விளங்கவில்லை. இந்தப் பெட்டியின் மற்றப் பக்கத்தில் பல இருக்கைகள் இருந்தன. ஏன் இந்த மக்கள் இரண்டு அடி வைத்து அங்கே போய் இருக்கவில்லை? எனினும் நானும் அப்பாவும்

பெட்டியின் மற்றப் பக்கத்தில் ஆசிய பெண்ணிற்கு முன்னால் தான் இருந்தோம். நான் சுத்தி பார்க்கும் போது எல்லோரும் எங்களை ஆச்சரியமாகவும் அசிங்கமாகவும் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அடுத்த புகைவண்டி நிலையத்திலும் மக்கள் ஏறினார்கள். முதலாவதாக ஒரு இளமையான பெண் ஏறினாள் அதற்குப் பின்னர் மூன்று வயது வந்த ஆண்கள் ஏறினார்கள். ஏறும் போது அவர்கள் எங்களையும் எங்களுக்குப் பின்நால் இருந்த ஆசிய பெண்ணையும் முறைத்துப் பார்த்தார்கள். திடீரென எங்களுக்கு பின்னால் இருந்த பெண் இருமினாள், நான் ஒன்றும் இல்லை என நினைத்தேன். ஆனால் எங்களை சுற்றி இருந்த எல்லோரும் அவளை முறைத்துப் பார்த்தார்கள் அந்த மூன்று ஆண்களும் எங்களை நோக்கி தள்ளாடியபடி வந்தார்கள். அவர்கள் அருகில் வரும்போது எனக்கு மிகவும் பயமாக இருந்தது. ஆனால் அவர்கள் என்னைத் தாண்டிப் போனார்கள்.

திடீரென மூன்று பேரும் எங்களுக்குப் பின்நால் இருந்த பெண்ணைப் பார்க்க தொடங்கினார்கள் மற்ற எல்லோரும் ஒன்றும் நடக்காத மாதிரி இருந்தார்கள். அப்பா எழும்பி அவர்களின் நடுவில் போய் நின்றார். நாங்கள் அடுத்த நிலையத்திற்கும் வந்தபடியால் அந்த மூன்று ஆண்களும் புகை வண்டியில் இருந்து இறங்கிப் போனார்கள்.

“Go Back to China, You brought the coronavirus here “போன்ற சில சொற்கள் தான் கேட்டது. அவர் சைனீஸ் என்ற படியால் தான் அப்படிப் பேசினார்கள் என விளங்கியது. இந்தக் காலத்தில் மக்கள் அவர்களை சுத்தமாக வைத்திருக்கிறார்கள். ஆனால் மனங்களில் சுத்தம் இல்லை.

## தை பிறந்தால் வழி பிறக்கும், தானாக விடியல் வரும்

-தர்மதா (நித்யா தர்மசீலன்)

(தௌசதிலம் - பளிங்கு)

தண்ணீரே இல்லாத தனிக்காட்டில் நின்றாலும்

தாங்கமுடியாத வெப்பம் தகித்தாலும்

திக்குத்தெரியாத அடர்காடே என்றாலும்

தீயோர் சூழ்ந்துன்னை தினமும் வதைத்தாலும்

துன்பம் நீங்குமென்று நம்பிக்கை கொள்!

தூய உன்மனதே துணையென்று நில்!

தென்றல் வீசும் உன் திசையைபார்த்தொருநாள்,

தேடிவரும் குளிரோடை, கோடிதுன்பம் ஓடிவிடும்

தை பிறந்தால் வழி பிறக்கும், தானாக விடியல் வரும்

தொல்லைகள் நீங்கி துளிராகும் நல்வாழ்வு

தோன்றும் பசுமை, வை நீ தன்னம்பிக்கை

தௌசதிலம் போலாம் மனசு, காணும் ஒளியோடு வழியும்

# வாசிப்பு பழக்கத்தை வளர்த்தல்.

-அபிநயின் ராஜ்குமார்

இன்றைய அவசர உலகில் பலரின் கவனம் பல்வேறு திசைகளில் திரும்பி உள்ளது. தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் பலர் குறிப்பாக இளைஞர்கள் புத்தகங்களை வாசிப்பது இல்லை. வாசிப்புப் பழக்கம் இல்லாத காரணத்தால் நமது அடுத்த தலைமுறையின் நிலை இருள்மயமாக்கப்பட்டுள்ளது என்பது ஒரு கவலை தரும் செய்தி ஆகும். இந்நிலை மாற வேண்டும்

"வாசிப்பதனால் மனிதன் பூரணத்துவம் அடைகிறான்" என்பதை உணர்ந்து தினமும் வாசிக்கவேண்டும். வாசிப்புப் பழக்கத்தை வளர்ப்பதால் ஏற்படும் நன்மைகள் என்னவென்று ஆராய்ந்து பார்ப்போம்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது பழமொழி. இதை அடைய வாசிக்கும் பழக்கத்திற்கு பெரிய ஒரு பங்கு உள்ளது. அதனால் நமது மனமும் உடலும் புதுப் பொலிவு அடைகிறது. ஒருவர் உள நலத்தையும் உடல் நலத்தையும் மன நலத்தையும் பெறமுடிகின்றது. மன அழுத்தம், சோர்வு போன்ற பிரச்சனைகளிலிருந்து வெளியே வந்து ஒரு ஆரோக்கியமான திருப்தி உள்ள நீண்ட கால வாழ்க்கையை வாழலாம். அத்துடன் வாசிப்பதனால் நமது ஞாபக சக்தியும் கவனமும் மற்றும் செறிவும் உயர்கின்றன என்று ஆய்வுகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

"கண்டதும் கற்க பண்டிதன் ஆவான் என்று" நமது முன்னோர்கள் கூறினார்கள். நாம் காணும் நூல் எல்லாவற்றையும் கற்பதன் மூலம் தமது அறிவு பன்மடங்கு பெருகும். , நாமும் சான்றோர்கள் ஆக மாற வாய்ப்பு உண்டு. அதன் விளைவாகவும் எதிர்காலத்தில் ஔவையார் போல் உலகுக்கு அறிவைக் கொடுக்கலாம். இன்றைய காலகட்டத்தில் மனிதன் வாழும் வரை கற்க வேண்டும் என்று ஒரு சமூக கோட்பாடு ஒன்றைக் காண்கின்றோம். கல்விக்கும் வாழ்வியலுக்கும் ஒரு பிரிக்க முடியாத உறவை காண்கின்றோம். இதையே நாம் “கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே” என்று பாடியுள்ளோம். ஆகவே எமது கல்வி அறிவையும் வளர்க்க வாசிப்பு பழக்கம் நமது வாழ்க்கையில் இன்றியமையாதது.

"நல்ல நூல்கள் நமது நண்பர்கள்" ஆகவே நாம் நல்ல நூல்களை நமது நண்பர்களாக வைத்திருப்பதனால் நமது வாழ்வு உயர்வது திண்ணம். நமது பொழுதுபோக்கில் வாசிப்பதால் நாம் பயனுள்ள வகையில் எமது நேரத்தை களிக்கின்றோம். ஓய்வு நேரத்தில் வாசிப்பதால் அறிவு வளர்கின்றது, புதிய புதிய தகவல்களை பெற்று நமது பொது அறிவையும் தன்னம்பிக்கையையும் வளர்க்கின்றோம்.

நூலகங்கள் நமது அறிவை வளர்க்கும் அரும் பொக்கிஷங்கள். நூல் நிலையத்துக்கு தினமும் செல்வதனால் நமக்கு விருப்பமான புத்தகங்களை வாசிக்கலாம். “நூல் பல கல்” என்று அவ்வையார் கூறும் கூற்றுக்கிணங்க கற்பனை, விஞ்ஞானம், வரலாறு, கலாச்சாரம், இலக்கியம் என்ற பல வகைப்பட்ட புத்தகங்களை வாசிக்கலாம். "தமது கடந்தகால தோற்றம் வரலாறு கலாச்சாரம் போன்றவற்றை அறியாத மக்கள் வேரில்லாத மரம் போன்றவை" ஆகவே நூலகங்களுக்குச் சென்று வரலாறு சார்ந்த புத்தகங்களை வாசித்து நமது பண்பாட்டின் வேர்கள் எவை என்று அறிய வாய்ப்பு உண்டு. இதன் ஊடாக தமது தனிப்பட்ட அடையாளம் பற்றிய புரிந்துணர்வுடனும் விழிப்புணர்வுடனும் வாழ முடியும்.

“எங்கும் இணையம், எல்லாம் இணையம்” என்ற இன்றைய நவீன காலத்தில் நாம் இணையத்தை பயன்படுத்தி மின் புத்தகங்களை வாசிக்கலாம். நம்பகத்தன்மையோடு உலகில் நடக்கும் பல சம்பவங்கள் பற்றிய தகவல்களையும் தரவுகளையும் பெறலாம். இன்றைய உலகமயமாக்கப்பட்ட, மாறிவரும் உலகில் சமூக ஊடகங்களை பயன்படுத்தி உலகில் உள்ள எல்லா மக்களும் ஒன்றிணைந்து வாசித்து வாழவும் முடியும்.

“நூலறிவு ஆகுமாம் நுண்ணறிவு” எவ்வளவு வாசித்திருக்கிறோமோ அந்த அளவிற்கு அறிவு விருத்தியடையும். ஆகவே நூல்களை வாசிப்போம், கற்போம், நுண்ணறிவு பெறுவோம்.

## நான் கண்ட கனவு!

- சுருதி தர்மசீலன்

நான் கை தளர்தலாக உணர ஆரம்பித்தபோது என் தலை என் தலையணை மீது விழுந்து என் கனவு தொடங்கியது. என் கண்ணைத் திறந்தபோது என்னை சுற்றி கடல் இருப்பதைப் பார்த்தேன். நூற்றுக்கணக்கான மீன்கள் ஒன்றாக நீந்துவதையும் பவளப் பாறைகள் கடற்படுக்கையில் போர்வை போல இருப்பதையும் கண்டேன். நான் திரும்பும்போது, ஒரு பிரகாசமான ஒளியைப் பார்த்து அதை நோக்கி நீந்தினேன். நான் நெருக்கமாக நீந்தி வந்த போது அந்த ஒளி காணாமல் போனது. நான் ஒருமுறை கண்சிமிட்டினேன், திடீரென்று ஒரு காந்தம் இரும்பைக் கவர்வது போல ஒரு அழகான கோவில் எனக்கு முன் தோன்றியது.

நான் நினைத்ததை விட அது மிகவும் அழகாக இருந்தது. கோவில் கல்லால் கட்டப்பட்டது. பாசிகள் அதன் மேல் வளர்ந்திருந்தன. சிலைகளைப் பார்க்கவே என் இதயம் பட பட என்று துடித்தது. கோவிலின் கோபுரத்தில் கண்ணாடி போல வெளிச்சம் தெரிந்தது. இது வெளியில் இப்படி இருந்தால், உள்ளே எப்படி இருக்கும்? நான் கட்டமைப்புகளைத் தொடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தேன். உள்ளே நீந்தினேன். கோவிலுக்குள் நீந்திய போது ஒரு சிறந்த சிவன் சிலை எனக்கு முன் நின்றது. நான் கிட்ட வர அந்த சிலை அதிக சக்தியை வெளியிடுவது போல் தோன்றியது. நான் மரியாதைக்குரிய வகையில் அதன் கால்களை நோக்கி நீந்தினேன். சில நிமடங்கள் அங்கே உட்கார்ந்து, பிறகு ஆராய முடிவு எடுத்தேன். கோவிலுக்குள் ஆழமாக நீந்தும் போது சில சிலைகள் மட்டுமே மண் அரிப்பால் அழிந்திருந்ததைப் பார்த்தேன். மற்றதெல்லாம் அப்படியே இருந்தன. நான் கோவிலின் முடிவை நோக்கி அதை பிடிக்க வேண்டும் என்ற வெறியுடன் அதற்கு கிட்ட நீந்தினேன்.

நான் மேற்பரப்பைத் தொட்டேன், ஆனால் நான் இரு கைகளையும் திரிசூலத்தில் வைத்த போது, எல்லாம் மறைந்துவிட்டன. நான் பவளப்பாறைகள், கோவில் மற்றும் அந்த திரிசூலம் ஆகியவற்றை நினைவில் வைத்தேன். ஓ! இது தான் என் தமிழ் மொழி புகழோடு வாழ்ந்த இடமா என்று ஆச்சரியப்பட்டேன். கண்களை திறந்த போது என் முன் எதுவுமே இல்லை. அப்போதுதான் நான் கண்டது கனவு என்று எனக்குப் புரிந்தது.

# காகத்தின் மகிமை

-புஸ்பா சிவபாலன்

மக்களோடு சேர்ந்து கூட்டாளியாக வாழும் பறவை காகம்.காக்கை கரவா கரைந்துண்ணும் என்று ஒரு புலவர் பாடியுள்ளார்.கறுப்பு நிறம் கொண்ட காகம் அழகான புத்திகூர்மையுள்ள பறவை.காக்கை பறவை எங்கள் சாதி என்றார் மகாகவி பாரதியார்.

காக்கா ஒரு அறிவிப்பாளர் என்று கூறலாம். ஏனெனில் காகம் மரத்தில் இருந்து கொண்டு எமது வீட்டைப் பார்த்து கா கா என்று கரைந்தால் யாரோ விருந்தாளிகள் வரப்போகின்றார்கள் என்று அநுபவசாலிகள் கூறுவார்கள்.எனவே காகம் ஒரு செய்தியாளர் மற்றும் பறவைகள், அதாவது அதிகாலையில் காகம் “கா கா” என்று கரைந்தும், சேவல் கொக்கறொக்கோ என்று கூவியும் எம்மை எழுப்பி விடுகின்றன. பாரதியாரின் பாட்டிற்கிணங்க காலை எழுந்தவுடன் படிப்பு என்று பிள்ளைகளை படிக்க வைப்பதும் கா கா என்று கரையும் காகம்தான்.அதிகாலையில் மக்களை எழுப்பி கடமைகளை செய்ய வைப்பதும் காகம்தான்.எனவே மணிக்கூட்டு வேலையை காக்கா செய்கின்றது.எனவே காக்கா எமது வழிகாட்டியாக துணையாளராக செயல்படுகிறது அல்லவா.

காகத்தின் குணம் பகிர்ந்து உண்ணல்.அதாவது அதற்கு உணவு கிடைத்தால் கா கா என்று கரைந்து தனது இனத்தையும் கூப்பிட்டு பகிர்ந்து உண்ணும்.இந்து சமயத்தவரின் விரதங்களில் முக்கியமான விரதம் புரட்டாதிச்சனி விரதம். சனீஸ்வரனின் வாகனம் காகம்அல்லவா.எனவேதான் சனிக்கிழமையில் விரதம் இருப்பவர்கள் கீரைக்கறிஉட்பட சோறு கறி சமைத்து அத்துடன் நல்லெண்ணையும் சேர்த்து வாழை இலையில் மதியவேளையில் காகத்திற்கு உணவு கொடுப்பார்கள்.காகம் சனீஸ்வரனின் வாகனம் ஆதலால் காகம் தாம் கூப்பிடும்போது வந்து சாப்பிட்டால்தான் விரதம் இருப்பவர்களுக்கு திருப்தி.எனவே காகம் சாப்பிட்டபின்பு தான் சாப்பிடவேண்டும் என்பது ஐதீகமும் கூட.எமது சாதகத்தில் கோசாரபலனின்படி ஒன்பது நவக்கிரகங்களில் ஒன்றான சனி பகை ஸ்தானத்தில் இருந்தால் இந்துக்கள் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் விரதம் இருப்பார்கள்.நம்பிக்கைதான் வாழ்க்கை அல்லவா.காக்காவும் நம்மை உணர்வு பூர்வமாக திருப்திபடுத்துகின்றது.

மருந்தே ஆயினும் விருந்தோடு உண் என்பது ஔவை பாட்டியின் வாக்கு.காகமும் விருந்தோடு பகிர்ந்து சந்தோசமாக உண்ணுகின்ற நற்பழக்கத்தை நாமும் மறுக்கமுடியாது.எமது சந்தோஷமான துக்கமான காரியங்களிலும் கூட காகம் பங்கு கொள்கின்றது.எமது நம்பிக்கை, வாழ்க்கைமுறை, சுகதுக்கங்கள் ,பழக்கவழக்கங்களில் காகம் எம்முடன் அநுசரணையாக இருப்பதால் காக்கையாரை எமது குடும்பத்தின் நன்பன் என்று நினைப்பதில் தவறில்லை.அவுஸ்திரேலிய காக்கைகள் கா கா என்று வித்தியாசமான ஓசையில் கரைந்தாலும் குறிப்பறிந்து புரிந்து கொள்ளும் பறவைகள். காகத்திற்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு அல்லவா.ஊரோடு உலகத்தோடு ஒத்து வாழ் என்பதற்கிணங்க ஒற்றுமையாக பகிர்ந்துனர்வுடன் வாழும் காகங்கள் எல்லாம் ஒரே குலம் ஒரே குணம்தான்

# சித்த மருத்துவத்தில் மூலிகைகளின் பங்களிப்பும் முக்கியத்துவமும்

-திருமதி. சிவசக்தி கணேசராசா
(ஓய்வு பெற்ற சித்த ஆயுர்வேத வைத்தியர்)

சித்த மருத்துவத்தில் பெரும்பாலான மருந்துகள் மூலிகை வர்க்கத்தின் இலை, வேர், பூ, தண்டு, வித்து, காய், பழம் என்பவற்றை பயன்படுத்தி தயாரிக்கப்படுகிறது. மருத்துவ குணம் உள்ள தாவர வர்க்கத்தையே சித்த மருத்துவ பாணியில் மூலிகை வர்க்கம் என்பர். இவற்றின் பயன்பாடு சித்த மருத்துவத்தில் மிக முக்கியமானதொன்றாகும். இவற்றை உரிய முறையில் எடுத்துச் சுத்திகரித்து மருத்துவ குடிநீர், கலவை, ஊறல், கஷாயம், ஆசவ அரிஷ்டம் போன்றவற்றில் பயன்படுத்துவர்.

உதாரணமாக, காய்ச்சலைத் தணித்து கபத்தை (Flem) வெளியேற்றும் கபசுரக் குடிநீரில் சேர்க்கப்படும் மூலிகை வகைகளை ஒவ்வொன்றாகப் பார்ப்போம். இவை ஒவ்வொன்றும்" குணபாட மூலிகை" என்ற புத்தகத்தில் பகுதி ஒன்றில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவை. இம் மூலிகைகள் அற்புதமான மருத்துவ குணங்களைக் கொண்டவை. குறிப்பாக வைரஸ் மற்றும் பாக்டீரியா போன்ற நுண்ணங்கிகளால் ஏற்படும் தொற்றுக்களையும், ஒவ்வாமையால் ஏற்படும் உடல் நலக் குறைபாடுகளையும் தீர்க்கவல்லவை.

**தூதுவளை (Botanical name - Solanum trilobatum)**



தூதுவளை அற்புதமான மூலிகையாகும். இம் மூலிகையை அளர்க்கம், சிங்கவல்லி போன்ற பெயர்களாலும் அழைப்பதுண்டு. இது சிறு முட்களுடன் கூடிய தாவரமாகும். இது தென்னிந்தியா இலங்கை போன்ற வெப்ப மண்டல நாடுகளில் வளர்ந்து வரும் ஒருவகைக் கொடி இனத்தைச் சார்ந்தது. இதன் இலை, பூ, தண்டு, காய், பழம் மற்றும்

வேர் ஆகியவை மருத்துவ குணம் மிக்கவை. இது சளியை வெளியேற்றி (Expectorant) இருமல் மற்றும் இழுப்பு என்பவற்றை குறைத்து, கபத்தினால் உண்டாகும் காய்ச்சலையும் போக்க வல்லது.

குணபாடபுத்தகம் தூதுவளையைக் கீழ் கண்டவாறு வர்ணிக்கிறது.

**காது மந்தம், காதழற்சி, காசம், தினவு, மதம்**
**ஓது மந்தம் முத்தோஷம் உட்சூலை தாது நட்டம்**
**மீதுளைப் பத்திரியைச் செய்வாராய்ந்தோர்**
**தூதுவளைப் பத்திரியைத் துய்த்து**

இதனை கஷாயம் செய்து காலை மாலை உண்டு வர மேற்கண்ட நோய்கள் நீங்கி மேனி பொலிவு பெறும். இதன் இலையை சமைத்தும், சம்பல் செய்தும் உண்பர். உணவிற்கு மிகவும் சுவையூட்டி உணவில் விருப்பத்தை உண்டுபண்ணும் தன்மை இதற்கு உண்டு.

**கற்பூரவள்ளி (Botanical name - Coleus aromaticus; English name - Tick leaved Lavender)**



கற்பூரவள்ளி பெரும்பாலும் எல்லா இடங்களிலும் வளரக்கூடிய கொடி இனத்தைச் சேர்ந்த மூலிகை வர்க்கமாகும். கற்பூரவள்ளிக்கு ஓமவல்லி என்ற பெயரும் உண்டு. இதற்கு அதி உன்னத மருத்துவ குணம் உண்டு. இருமல், சளி, ஜலதோஷம், மார்பில் கட்டிய சளியால் ஏற்படும் காய்ச்சல், நீர்க்கோர்வையால் (Sinusitis) ஏற்படும் தலைவலி என்பன விலகும். குறிப்பாக குழந்தைகளுக்கு இதன் இலைச் சாற்றுடன் கற்கண்டும் தேனும் சேர்த்து கொடுக்க இருமல், இழுப்பு தணிந்து, சளியும் வெளியேற்றப்பட்டு குழந்தை நன்கு தூங்கும். கற்பூரவள்ளியின் மருத்துவ குணத்தை குணபாடப் புத்தகத்தில் உள்ள பாடல் கீழ்வருமாறு வர்ணிக்கின்றது.

**காசம் இருமல் கதித்த மசூரி ஐயம்**
**பேசுபுற நீர்க்கோர்வை பேருங்கான் வீசுசுரங்**
**கற்பாறை ஒத்த நெஞ்சில் கட்டும் கபம் வாதம் போம்**
**கற்பூரவள்ளி தனைக் கண்டு**

கற்பூரவள்ளியை கபசுரக் குடிநீரில் இட்டு கஷாயம் செய்து பருகினால் நோய்கள் தீர்ந்து சுவாசத் தொகுதியும் வலுப்பெறும்.

**துளசி (Botanical name - Ocimum sanctum; English name - Hole Basil)**



துளசி பெரும்பாலும் வெப்பவலய நாடுகளில் பயிராகும் ஒரு வித வாசனை செடி வகை ஆகும். இதற்கு ஒரு கற்பூர வாசனையும் காரமான ருசியும் உண்டு. இந்த செடியானது ஏறக்குறைய இரண்டு தொடக்கம் மூன்று அடி வரை வளரக் கூடியது. இதில் சில வகைகள் உண்டு. அவையாவன கருந்துளசி, செந்துளசி, கல்துளசி, முள்துளசி, நிலத்துளசி மற்றும் நாய் துளசி என்பவை ஆகும். எல்லா வகை துளசி செடிகளிலும் மருத்துவ குணங்கள் நிறைய இருந்தாலும், அதில் பெரும்பாலும் கருந்துளசி சிறப்பு மிக்கது. இதற்கு இருமல், இழுப்பு, நெஞ்சுச்சளி சேருவதால் ஏற்படும் குக்கல், கிருமிகளின் தாக்கத்தினால் ஏற்படும் மார்புச்சளி, தொண்டைக்கட்டு, தொண்டை அழற்சி, புண்பாடு மற்றும் சந்நிபாத சுரங்கள் (Pneumonia) என்பன நீங்கும். குணபாடப் புத்தகம் துளசியைக் கீழ் கண்டவாறு வர்ணிக்கிறது.

**இருமலோடு நெஞ்சிழுப்புச் சுவாசம்**
**கிருமி ஜலதோஷம் கேவல் - மருமச்**
**சளி ரூட்சை சூலை விடம் சந்நியிவை போக்கும்**
**தளிரார் கருந்துளசி தான்.**

துளசி இலையைப் பாலில் கலந்து காய்ச்சி குடிக்க எவ்விதமான கொடிய வைரஸ்களும் எம்மை அண்டாது. அத்துடன் கபத்தையும் (Flem) தணிக்கும்.

# சுவாமி விவேகானந்தரின் சீரிய பொன்மொழிகள்

-குமாரசாமி கணேசராசா
(ஓய்வு பெற்ற பொறியியலாளர்)

சுவாமி விவேகானந்தர், சுவாமி ராமகிருஷ்ணரின் தலைமை சீடரும், ராமகிருஷ்ண மடத்தின் நிறுவனரும் ஆவார். இவர் வேதாந்த தத்துவங்களை அமெரிக்கா ஐரோப்பா போன்ற மேற்குலக நாடுகளில் அறிமுகப்படுத்துவதில் அளப்பரிய பங்காற்றியுள்ளார். என்றும் சுவாமி விவேகானந்தரின் வேதாந்த பொன்மொழிகள் மதச் சார்பற்று, மனிதரின் வாழ்வியல் மேம்பாட்டுக்கு வழிகாட்டியாகும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. இதனால் எமது சமூக முன்னேற்றத்தின் பொருட்டு நான் வாசித்து அறிந்த சுவாமி விவேகானந்தரின் பொன்னான மொழிகளில் சிலவற்றை இவ்விதழின் வாயிலாக உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் ஆனந்தம் கொள்கிறேன்.

- நீ எதை நினைக்கின்றாயோ அதுவாக ஆகிறாய். உன்னை வலிமை உடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவன் ஆவாய்!
- உனக்குத் தேவையான எல்லா வலிமையும், உதவியும் உனக்குள்ளேயே உள்ளன.
- உடல் பலவீனத்தையோ, மன பலவீனத்தையோ உண்டாக்கும் எதையும் அணுகக் கூடாது.
- உன்னை நீயே பலவீனன் என்று நினைத்துக் கொள்வது மிகப் பெரிய பாவம்.
- பலவீனம் இடையறாத சித்ரவதையாகவும் துன்பமாகவும் அமைகிறது.
- நமது சமுதாயம் இப்போது இருக்கும் தாழ்ந்த நிலைமைக்கு மதம் காரணம் அல்ல. மதத்தை முறையாகப் பின்பற்றாமல் போனதுதான் சமுதாயத்தின் வீழ்ச்சிக்குக் காரணம்.
- தீண்டாமையை தீவிர கொள்கையாகவும், உணவு உண்பதையே தெய்வமாக கருதும் வரை நீங்கள் ஆன்மிகத்தில் முன்னேற முடியாது.
- அடிமைகளின் குணமாகிய பொறாமையை முதலில் அழித்துவிடு.
- எப்போதும் பொறாமையை விலக்குங்கள். இதுவரையிலும் நீங்கள் செய்யாத மகத்தான காரியங்களை எல்லாம் செய்து முடிப்பீர்கள்.
- தன்னலம் சிறிதும் இல்லாமல் நிறைந்த அன்புடன் பழகுபவர்களே இப்போது உலகத்திற்குத் தேவைப்படுகிறார்கள்.
- நான் இப்போது இருக்கும் நிலைக்கு நானே பொறுப்பு.
- சோம்பேறித்தனத்தை எந்த வழியிலும் துரத்தியாக வேண்டும். சுறுசுறுப்பு என்பதற்கு எதிர்ப்பது என்பது பொருள்.
- பகை, பொறாமை ஆகியவற்றை நீ வெளியிட்டால், அவை வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வந்து சேர்ந்துவிடும்.
- வலிமையே மகிழ்ச்சிகரமான, நிரந்தரமான, வளமான, அமரத்துவமான வாழ்க்கையாகும்.

- பிறரது பாராட்டுக்கும் பழிக்கும் செவி சாய்த்தால் மகத்தான காரியம் எதையும் செய்ய முடியாது.
- தோல்விகளைப் பற்றிக் கவலைப்படாதவர்கள், லட்சியத்திலிருந்து ஆயிரம் தடவை வழுக்கி விழுந்தாலும் லட்சியத்துக்கு உழைப்பதில் பிழைகள் நேர்ந்தாலும், திரும்பத் திரும்ப அந்த லட்சியத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள். லட்சியத்தை அடைய ஆயிரம் தடவைகள் முயலுங்கள். அந்த ஆயிரம் தடவைகள் தவறினாலும் இன்னுமொரு முறை முயலுங்கள். முயற்சியைக் கைவிடாதீர்கள்.
- வெற்றிகளை சந்தித்தவன் இதயம் பூவைப்போல் மென்மையானது. தோல்வி மட்டுமே சந்தித்தவன் இதயம் இரும்பைவிட வலிமையானது.
- இதயம் சொல்வதை செய். வெற்றியோ தோல்வியோ அதை தாங்கும் சக்தி அதற்கு மட்டும்தான் உண்டு.
- நீ பட்ட துன்பத்தை விட அதில் நீ பெற்ற அனுபவமே சிறந்தது.
- உண்மைக்காக எதையும் துறக்கலாம். ஆனால் எதற்காகவும் உண்மையைத் துறக்கக்கூடாது.
- பொய் சொல்லி தப்பிக்காதே. உண்மையை சொல்லி மாட்டிக்கொள். பொய் வாழ விடாது. உண்மை சாக விடாது.
- கீழ்ப்படியக் கற்றுக்கொள். கட்டளையிடும் பதவி தானாக உன்னை வந்து அடையும்.
- எந்த குடும்பத்திலுள்ள பெண்மை கொண்டாடப்படவில்லையோ, அந்த வீடும் பாழ். அந்த நாடும் பாழ்.
- செயல் நன்று. சிந்தித்து செயலாற்றுவதே மிகவும் நன்று. உனது மனதை உயர்ந்த லட்சியங்களாலும், சிந்தனைகளாலும் நிரப்பு. அவற்றை ஒவ்வொரு நாளின் பகலிலும் இரவிலும் உன் முன் நிறுத்து. அதிலிருந்து நற் செயல்கள் விளையும்.
- சுயநலமின்மை, சுயநலம் என்பவற்றைத் தவிர, கடவுளுக்கும் சாத்தானுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை.

## டொக்ரர் மாமா

டொக்ரர் மாமா வயரினைத் தன்
காதில் வைத்துப் பார்க்கிறார்
லொக்கு லொக்கென்று இருமும் - என்
இதயச் சத்தம் கேட்கிறார்.

தாதி அக்கா மீற்றரைத் தான்
உதறி உதறிப் பார்க்கிறார்
கையில் சூடு பட்டது போல்
பதறிப் போயே நிற்கிறார்

அழகான கண்டொஸ்சை காட்டி
டாக்டர் மாமா வருகிறார்
கைக்குள் மறைத்துக் கொண்டு
கடுப்பூசி கொண்டு வருகிறார்


கண்டொஸ்சு வேணும் எண்டால்
கடுப்பூசி போட வேணும்
கண்டொஸ்சு கடுப்பூசி
கடுப்பூசி கண்டொஸ்சு

## முயலும் ஒட்டகச்சிவிங்கியும்

ஒரு வறண்ட காட்டுப் பிரதேசத்தில், பல மிருகங்கள் வாழ்ந்து வந்தன. அதில் ஒரு ஒட்டகச்சிவிங்கி ஒவ்வொரு நாளும் உயரமான மரங்களில் உள்ள இலைகளை பறித்து சாப்பிட்டு வந்தது. ஒரு நாள் அந்த வழியே முயல் ஒன்று மிகவும் பசியுடன் வந்தது. அந்த முயல் "கீழே உள்ள இலைகளெல்லாம் வாடிப்போய்இருக்கின்றன அவை சுவையாக இல்லை அதனால் மேலே உள்ள இலைகளில் சில எனக்குத் பறித்துத் தருவாயா?" என்றுக் கேட்டது. அதற்கு ஒட்டகச்சிவிங்கி "மேலே உள்ள இலைகளெல்லாம் சுவையானவை அவை எனக்குரியவை உனக்குத் தரமாட்டேன்." என்று கூறியது. "நீ உயரமாக வளர்ந்து வந்து இதை சாப்பிடு" என்று கூறி கேலி செய்தது. முயல் பசியுடன் திரும்பிச் சென்றது. அந்த வழியே சிங்கம் ஒன்று வந்தது. சிங்கத்தை கண்ட முயல் ஓடி ஒளிந்தது. ஒட்டகச்சிவிங்கி எங்கேயும் ஒளியமுடியாமல் சிங்கத்திடம் மாட்டியது. சிங்கம் ஒட்டகச்சிவிங்கியின் கால்களைக் கடித்து காயப்படுத்திவிட்டுச் சென்றது. முயல் மரத்தின் பின்னால் இருந்து வெளியே வந்தது. ஒட்டகச்சிவிங்கி காயங்களுடன் நடக்க முடியாமல் படுத்திருந்தது. இதைப் பார்த்த முயல் சில இலைகளை எடுத்து ஒட்டகச்சிவிங்கயி காயங்களின் மேல் போட்டது. அதற்கு ஒட்டகச்சிவிங்கி "உன்னைச் கேலி செய்ததற்கு மன்னித்துக்கொள்" என்று சொன்னது.

நீதி: யாரும் உதவி செய்யாவிட்டாலும் நாங்கள் அவர்களுக்கு உதவி செய்வது நல்லது.

ஆக்கம்
- வருணிகா ரஜேஸ்குமார்





# தமிழ் சமுதாயத்தின் ஒரு சில குறுகிய மனப்பான்மைகள் இரண்டாம் தலைமுறையை பாதிக்கின்றது.

-ஹரிஜன் பசுபதிதாசன்

அவுஸ்திரேலியா என்பது ஓர் பல்காலாச்சார நாடு, அதாவது பல இனத்தவர்களோடு ஒன்றிணைந்து வாழும் சமுதாய அமைப்பை நாம் இங்கே பேணிக் காக்கின்றோம். இந்நாட்டில் வளர்ந்து வரும் இரண்டாம் தலைமுறை இளைஞர்கள், பல சமுதாயத்தினரோடு பழகி வருவதனால், ஓர் பரந்த மனப்பான்மையை கொண்டுள்ளனர். இருப்பினும், இவ்வாறான இளைஞர்களின் வாழ்க்கையில், தங்களையே அறியாமல் பாதிப்பு ஏற்படுத்துவது, தமிழ் சமுதாயத்தின் முதலாம் தலைமுறையினர்! முதலாம் தலைமுறையை சேர்ந்த எம் பெற்றோர், தாத்தா பாட்டி போன்றவர்கள் தங்களுடைய தாய்நாட்டில் இருக்கும் "குறுகிய மனப்பான்மைகளை," இங்கே என்னைப் போன்ற இளைஞர்களுடைய வாழ்க்கையில் திணிக்கின்றார்கள். யதார்த்தத்தில், தமிழ் சமுதாயத்தில் சிலாகிக்கக்கூடிய பல சாலச் சிறந்த மனப்பான்மைகள் உண்டு. ஆனாலும், ஒரு பழக்கூடையில் எவ்வாறு இனிப்பான கனிகளும், புளிப்பான கனிகளும் இருக்குமோ அது போலத் தான், எம் சமுதாயத்தில், இன்றைய நவீன வாழ்க்கைக்கு பொருத்தமற்ற குறுகிய மனப்பான்மைகள் சில உண்டு. இம்மனப்பான்மைகள், இரண்டாம் தலைமுறையினரின் மனநலம், கல்வி, வேலை, குணாதிசயம் மற்றும் குடும்பம் என்ற ஐந்து விடயங்களில், விளைவுகளை ஏற்படுத்துகிறது.

முதலாவதாக, இளைஞர்களுடைய மனநலம் பெரிதளவில் பாதிக்கப்படுகிறது. 2016ல் மோனாஷ் பல்கலைக்கழகம் செய்த ஓர் ஆராய்ச்சியின் படி, அவுஸ்திரேலியாவுக்கு குடிபெயர்ந்து வந்திருக்கும் இனத்தவர்களில், அதிகமாக தற்கொலை செய்பவர்கள் ஈழத் தமிழர்கள் என்று தெரியவந்தது! இதன் காரணத்தை கண்டறியும் போது, தாய்நாட்டில் நடந்த போர் மட்டுமல்லாமல், எம் சமுதாயத்தின் குறுகிய மனப்பான்மைகள் இதற்கு மூல காரணமாக உள்ளது என்பது தெட்டத் தெளிவாகியது. ஒருவன் தன் கல்வியிலோ, வேலையிலோ, அல்லது சமுதாயத்திலும் கூட சாதிப்பதற்கு, அவன் மனதளவில் திடகாத்திரமாக இருப்பது அத்தியாவசியமானது என்பதை நாம் அனைவரும் அறிவோம். அதில் எவ்வகை ஐயமும் இல்லை. ஆனால் எங்கள் சமுதாயத்தில், மனநலம் என்ற விடயத்தை அலட்சியமாக கருதுகிறார்கள். உதாரணமாக, ஒரு மகள் தன் பெற்றோரிடம் சென்று, "எனக்கு மனவுளைச்சலாக உள்ளது" என்று கூறினால், "நீ என்ன பைத்தியமா?" என்று தான் அவள் பெற்றோர்கள் கேள்வி கேட்பார்கள். பெற்றோர்களுக்கு காயப்படுத்தும் எண்ணம் இல்லாமல் இருந்தாலும், இங்கே வளர்ந்து வரும் இரண்டாம் தலைமுறையினருக்கு மன அழுத்தம் ஏற்படுத்துவதற்கு பல வாய்ப்புகள் உள்ளன என்பதை, அவர்கள் உணரவேண்டும். அதிலும், போட்டா போட்டி போடும் எம் சமுதாயத்தின் மனப்பானமைகள் தான் அவ்வாய்ப்புகளில், முதல் இடம் பெறுகிறது. போட்டி என்பது ஓர் தீய விடயம் அல்ல. தமிழ் இனத்தின் பல வெற்றிகளுக்கு கூட இப்போட்டி தான் வழிவகுத்துள்ளது. ஆனால், போட்டி என்பது இரண்டு வகைப்படும்;

ஆரோக்கியமான போட்டி மனப்பான்மை, ஆரோக்கியமற்ற போட்டி மனப்பான்மை. "நாம் வெற்றி பெறுவது வேறு, பிறரை தோற்கடிப்பது வேறு" என்று சுகிசிவம் அவர்கள் இதை மிகவும் அழகாக கூறியிருப்பார். இதற்கு உதாரணமாக, பள்ளியில் என்னை விடச் சிறப்பாக படிக்கும் ஓர் மாணவனை விட, நான் சீராக தென்படவேண்டும் என்று என் சுயமுயற்சியில் முன்னேறி வந்தால், அது ஆரோக்கியமான போட்டி மனப்பான்மை ஆகும். ஆனால், அதே மாணவனைக் கண்டு பொறாமையில் அவனை வீழ்த்த நான் எண்ணியிருந்தால், அது ஆரோக்கியமற்ற போட்டியாகும். இவ்வகை போட்டி மனப்பான்மை தான் இன்றைய தமிழ் சமூகத்தில் ஆதிக்கம் செலுத்தி, பல வாலிபர்களுடைய மனதில் தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தியுள்ளது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை ஒப்பிடுவது வழக்கமானாலும், அதற்கென்று ஒரு முறை உண்டு. ஓர் தாய் தன் மகனைப் பார்த்து, "இந்த முறை நீர் இரண்டாம் பரிசு பெற்றது சிறப்பு! அடுத்த முறை அந்த பிள்ளையைப் போன்று முதல் இடம் பெற வேண்டும்!" என்ற முறையில் ஒப்பீடு செய்தால், அந்த மகனுக்கு அது உத்வேகமாக அமையும். எனினும், அந்த தாயார் உண்ர்ச்சி வசப்பட்டு, "நீ என்ன இரண்டாம் பரிசு பெற்றுள்ளாய். முதலாம் பரிசைப் பெற்ற மாணவனைப்பார்! அவன் தான் உண்மையான பிள்ளை" என்று அதட்டினால், ஓர் அம்மாவே தன் மகனுக்கு தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்துகிறார். இதனால், மெல்ல மெல்ல அந்த இளைஞனின் மனதில் மன அழுத்தம் முளைவிடத் தொடங்கி, அந்த உணர்வுகள் எரிமலையாக வெடிக்கின்ற போது தான், அது தற்கொலையாக மாறுகிறது. இவ்வாறு தற்கொலை செய்யும் இரண்டாம் தலைமுறையினர்கள் கோழைகள் அல்ல, ஆனால் எங்கள் சமுதாய அழுத்தத்திற்கு பலியானவர்கள்!

அதைத்தாண்டி, ஆரோக்கியமற்ற போட்டி என்பது, இளைஞர்களின் கல்வியை பாதிக்கின்றது. இதற்கு ஓர் உதாரணமாக, கூடையில் இருக்கும் நண்டுகளை கற்பனை செய்துக்கொள்வோம். அக்கூடையில் இருக்கும் ஓர் நண்டு, மேலே ஏறி தப்பிக்க முயன்றால், மற்ற நண்டுகள் அதன் காலை வாரி விடும். இறுதியில், எந்த ஒரு நண்டும் தப்பிக்க வழியின்றி, கூடையில் தத்தளித்துக் கொண்டே இருக்கும். இது தான் எம் இளைய மாணவர்களின் இன்றைய நிலமை. எம் சமுதாயத்தில் இன்று ஊறியிருக்கும் இந்த ஆரோக்கியமற்ற போட்டியினால், மாணவர்கள் தத்தம் தனித்துவமான திறன்களை வளர்த்துக்கொள்வதை விட, சக மாணவர்களை விட அறிவாளியாக காணப்படவேண்டும் என்ற சிந்தனைப் போக்கு தான்; மாணவர்கள் மத்தியில் அதிகமாக உண்டு. ஆகையால், சில இளைஞர்கள் ஏனைய மாணவர்களை வீழ்த்த முயற்ச்சிப்பதுண்டு. ஆனால் இதில் கவலையான உன்மை என்னவென்றால், "தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்பதற்கேற்ப, மற்றவர்களை வீழ்த்த செய்யும் முயற்சிகள் யாவும், தங்களுக்கு தாங்களே குழி பறித்துக்கொள்வதற்கு சமம் என்பதை மாணவர்கள் உணருவதில்லை. மற்றவர்களை முதலாக வர விடக்கூடாது, என்பதற்காக அவர்களை வீழ்த்தும் போது, அந்த நபரும் முன்னேறாமல், அனைவரும் அக்கூடையில் இருக்கும் நண்டுகளைப் போன்று, தத்தளித்துக்கொண்டு இருப்பார்கள்.

வாழ்க்கையின் அடுத்த கட்டமான வேலை, என்பதிலும் கூட, எம் சமுதாயத்தின் அசாத்தியமான எதிர்பார்ப்புகள் ஓர் தாக்கத்தை உருவாக்குகிறது. நாம்

அனைவரும் அறிவோம், பெரும்பாலான தமிழ் பெற்றோர், தங்கள் குழந்தை ஓர் மருத்துவராகவோ, பொறியியலாளராகவோ, வழக்கறிஞராகவோ வர வேண்டும் என்று எதிர்பார்கின்றனர். ஆனால், தங்கள் பிள்ளையின் விருப்பத்தை அறியாமலும், தங்கள் பிள்ளைக்கு அது சாத்தியமா என்று சிந்திக்காமலும், சிலர் தங்கள் ஆசைகளை பிள்ளைகள் மீது திணிக்கின்றார்கள். "தாய் 8 அடி பாய்ந்தால், குட்டி 16 அடி பாயவேண்டும்" என்று அவாவுடன் எதிர்பார்க்கும் எம் சமுதாயத்தின் மத்தியில், அசாதாரண துறையில் செல்ல விரும்பும் ஓர் இளைஞன், தன் ஆசைகளை புதைக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அவ்வாறான ஓர் இளைஞர் தான் பிரியா. கனஸ்தான யசோதரன் என்ற இரண்டாம் தலைமுறை கனேடியப் பெண் நடாத்தும் வானொலி சேவையில் பங்கேற்ற, அவுஸ்திரேலியப் பெண்மணி பிரியா, தன் பெற்றோரின் வற்புறுத்தலினால், விருப்பம் இல்லாத வேலையை செய்து, வாழ்க்கையில் விரக்தியை அடைந்துவிட்டார் என்று குமுறினாள். இது பிரியாவின் கதை மாத்திரம் அல்ல, பல தமிழ் இளைஞர்களின் கதையும் கூட. ஆனால் இதில் மிகவும் வருத்தமான விடயம் என்னவென்றால், பெற்றோர்கள் அநேகர், போலியான சமுதாயக் கோட்பாட்டிற்கு பயந்து தான் இவ்வாறு தத்தம் பிள்ளைகள் மீது எதிர்பார்புகளை சுமத்துகிறார்கள். "அசாதாரண துறையில் சென்றால் சமுதாயம் என்ன பேசும்?" "மற்றவர்கள் என்ன நினைப்பார்கள்?" என்ற அச்சத்தினால் தான், பல முதலாம் தலைமுறையினர் தங்கள் பிள்ளைகளின் ஆசைகளை கேட்காமல், சமுதாயத்தின் ஆசைகளுக்கு செவி சாய்த்தனர். நேற்றைய தலைமுறை சமுதாயத்திற்காக வாழ்ந்தார்கள், இன்றைய தலைமுறையாவது தங்களுக்காக வாழ அனுமதியுங்கள்!

எனவே, இதற்க்கு தீர்வு யாதெனில், "திருடனாய் பார்த்து, திருந்தா விட்டால், திருட்டை ஒழிக்க முடியாது" என்பதற்கேற்ப, முதாலாம் தலைமுறையை சேர்ந்த பெற்றோர்களும், மூத்தோர்களும் தங்களுடைய சில குறுகிய மனப்பான்மைகள், எவ்வாறு அவுஸ்திரேலியா போன்ற நாட்டில் வளர்ந்து வரும் இன்றைய தலைமுறையினருக்கு பொருத்தமற்றது என்பதை உணர்ந்து கொண்டால் தான், இதற்கு ஓர் விடிவுக்காலம் பிறக்கும். இம்முயற்ச்சியை முன்நின்று சாத்தியப்படுத்துவதற்கு தகுந்தவர்கள் இளையஞர்கள் ஆவார்கள். "இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள்" என்று அப்துல் கலாம் கூறிய வேதவாக்கிற்கேற்ப, இளைஞர்களால் தான் தயக்கமின்றி, தமிழ் சமுதாயத்தில் உள்ள இச்சிறு குறையை எடுத்துக்காட்டி, மாற்றத்தை உருவாக்க முடியும். ஆகவே, எம் சமுதாயத்தின் குறுகிய மனப்பான்மைகளை சீர்த்திருத்துவோம், தமிழர்களாக ஒன்றுகூடி, அடுத்த தலைமுறையை மெருகேற்றுவோம்!

# நான் யார்?

- மகேஷ் நமசிவாயம்

*"நான் யார்? என் உள்ளம் யார்? ஞானங்கள் யார்? என்னை யார் அறிவார்?*

ஆண்டு இறுதி மார்கழி பாடசாலை விடுமுறை தொடங்கிவிட்டது. வழமை போல நான் அப்பாவுடன் மகிழுந்தில் பிள்ளையார் கோவிலுக்கு செல்லும் போது, இளையராஜாவின் திருவாசகத்திலிருந்து திருக்கோத்தும்பி பாடலை இசைக்கவிட்டார். என் மனது அதன் முதல் வரியிலேயே சுற்றியது.

நான் கோவிலில் இருக்கும் போது ஐயா சுவாமிக்கு பூசை செய்ய ஆயத்தமாகிறார். அப்பா பிள்ளையார் கதையை படிக்க ஒழுங்குகளை செய்கிறார். எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து எல்லோரும் என்னை "எப்ப நீங்கள் பாடுவீங்கள்?" எனக் கேட்பார்கள். இன்று எனக்கு மறக்க முடியாத நாள். நான் பிள்ளையார் கதையை முதன்முதலாக படிக்கப்போகிறேன். எனது வாசிப்பு முறை வரும் போது நான் மிகவும் பதட்டமாக இருக்கிறேன். நான் பாடும் போது சில சில தவறுகள் விட்டாலும் நன்றாக தான் படித்தேன். எல்லோரும் எனது உச்சரிப்பு, அசல் யாழ்பாணத்து தமிழாக இருப்பதாக சொன்னார்கள். இது என்னை அடுத்த நாளும், பிறகு ஒவ்வொரு நாளும் நன்றாக படிக்க ஊக்குவித்தது.

பாரம்பரியம் ஒவ்வொருவருக்கும் தனித்துவமானது. அவுஸ்திரேலியா ஒரு பல்கலாசார சமூகம். இங்கே ஒருவர் தனது கலாசாரத்தை பின்பற்றி வாழ்வதில் ஒரு தவறும் இல்லை. சிலர் தமது பாரம்பரியத்தை பேணி வாழ முயற்சிப்பார்கள், ஒரு சிலர் தமது பாரம்பரியத்தை மறைக்க முயற்சிப்பார்கள். இது ஒவ்வொருவரும் தமது சுற்றுப்புறத்தை எப்படி அணுகுகிறார்கள் என்பதை பொறுத்தது. ஒருவர் தமது பாரம்பரியத்தை மறைத்தால் அது தமது முன்னோர்களுக்கு செய்யும் அநீதி என்பது எனது நம்பிக்கை.

எனது ஆரம்பப் பாடசாலை அதிபர் ஒரு ஆங்கிலேயர். முதன்முதலாம் அசெம்ப்லீயிலே "எல்லோரும் அவரவர் தாய்மொழியை பேசுதல் அவசியம், மேலும் தாய்மொழி ஒரு விலைமதிப்பற்ற வளம்" என கூறினார். இது என் மனதில் ஆழமாக பசுமரத்தாணி போலே பதிந்தது.

எல்லாவற்றிற்கும் முன் நான் ஒரு தமிழன். உலகத்தின் மிகவும் தொன்மையான மொழிகளில் ஒன்றை எழுதி, பேசி, வாசிக்கும் மக்களில் ஒருவன். என்னை மழலையிலிருந்து ஒரு தமிழனாகத்தான் எனது பெற்றோர் வளர்க்கிறார்கள். நான் எனது உறவினர்களுடன் பேசும் போது தமிழில் பேசுவேன். எனது நெருங்கிய உறவினர்கள் பேசும் போது அவர்கள் என்னிடம் அன்பாகவும் பாசமாகவும் பேசும் போது எனக்கு அவர்களின் பாசமான சொற்கள் முழுமையாக விளங்கும். இதனால் எனக்கு ஒரு நல்ல உணர்வு வரும். சில வேளைகளில் அவர்கள் நான் அவுஸ்திரேலியாவில் வளர்வதால் ஆங்கிலத்தில் உரையாடத் தொடங்குவார்கள். நான் அவர்களை பல சமயங்களில் தமிழில் பதில் கூறி ஆச்சரியப்படுத்துவேன்.

அத்துடன், எனது பெற்றோருடன் தமிழ் மொழி அழிந்து விடாமல் வருங்கால சந்ததிக்கு தமிழ்மொழியை கொண்டுசெல்ல வேண்டும். இதை செய்வதற்கு இலகுவான முறை அதை படித்து பேசுவதாகும். இதில் எனக்கு மிகுந்த பெருமை.

வளர்கிறேன், இந்துவாக தான் எப்போதும் இருப்பேன். மிகவும் செறிவான தத்துவங்களுடன் இருக்கும் ஒரு மதத்தை நான் சேர்ந்துள்ளேன். இதில் எனக்கு பெருமை. நான் தினமும் பாடசாலைக்கு திருநீறு அணிந்து செல்வேன். ஒரு நாள் எனது பாடசாலை



*இடது பக்கத்தில் இருப்பது கி.மு இரண்டாம் நூற்றாண்டில் இலங்கையின் வடமாகாணத்தில் உள்ள கந்தரோடையில் பாவனையில் இருந்த ஒரு நாணயம். இந்த நாணயம் எமது தமிழ்மொழியின் பண்டைய வரலாற்றிற்கு ஒரு நல்ல சான்று.*

அதிபரிடம் ஏன் தினமும் திருநீறு அணிகிறேன் என்பதை தெளிவாக விளக்கி கூறினேன். எனது மத பண்டிகைகளில் மிகவும் ஆர்வத்துடன் பங்குபெறுவேன். அத்துடன் அடிக்கடி கோவில் சென்று இந்து மத சமூகத்துடன் என் தொடர்புகளை பேணுகின்றேன்.

முன்பு மகிழுந்தில் திருவாசகத்தை இசைத்ததில் ஒன்றை சொல்ல மறந்துவிட்டேன். எமது மகிழுந்து பயணங்களில் எப்போதும் தமிழ் மற்றும் கர்னாடக இசை பாடல்களை மட்டும்தான் ஒலிப்பது வழக்கம். பல சமயங்களில் இது போரடித்தாலும் கர்னாடக சங்கீதத்தை படிக்க இது மிகவும் உதவியாக உள்ளது. அதேபோல் சாதாரணமாக அறிய முடியாத பலபாடல்களை எனக்கு அறிமுகப்படுத்தியது.

நான் இந்து மதத்தைச் சேர்ந்தவன். நான் இந்துவாக பிறந்தேன், இந்துவாக

நான் சைவ உணவை மட்டுமே உண்பவன். இது எனது அப்பாவின் குடும்பத்தில் ஒரு பாரம்பரிய வழக்கம். பல தலைமுறைகளாக அவர்கள் சைவ உணவு மட்டுமே உண்பவர்கள். இதில் நிறைய நன்மைகள் உள்ளது. சைவ உணவுகள் காலநிலை மாற்றத்திற்கு குறைவான பாதிப்பையே உண்டாக்கும். அத்துடன், கொல்லாமை எனும் அகிம்சை தத்துவம் ஒரு நல்ல உணர்வை தரும். சைவ உணவு மிகவும் ருசியானது. பாடசாலையில் எனது

மதிய உணவை வேற்றுமொழி நண்பர்கள் ருசித்து உண்பார்கள்.

எனது பெற்றோர் இலங்கையிலிருந்து குடிபெயர்ந்தவர்கள். என் வேர் இலங்கையில் உள்ளது. நான் ஆண்டுதோறும் இலங்கை செல்லும் போது நிறைய இந்து ஆலயங்களை தரிசிப்பதுடன் கலாச்சார முக்கியம் வாய்ந்த இடங்களுக்கும் செல்வேன். அது ஒரு தனி அனுபவம். இது என்னை எனது கலாச்சாரத்துடன் இணைக்கின்றது. அத்துடன் நான் அங்கே இருக்கும் போது நிறைய தமிழ் பேசி எனது மொழித் திறனையும் வளர்க்கிறேன். சரளமாக தமிழ் பேசுவதால் மற்றவர்களால் ஒரு அன்னியனாக பார்க்கப்படமாட்டேன்.

நான் ஒரு ஆஸ்திரேலியன். இந்த வாழ்வின் எல்லா விழுமியங்களும் எனக்குள் எப்படியோ வந்து சேர்ந்துவிடும். அதே நேரத்தில் இதயத்தின் ஆழத்தில் நான் ஒரு தமிழன், இந்து, இலங்கையன்.

## முத்தான மூன்று எழுத்துக்கள்

-பவித்திரன் முகுந்தன்

**அம்மா** என்பது மூன்றெழுத்து!
**அப்பா** என்பது மூன்றெழுத்து!
**அக்கா** என்பது மூன்றெழுத்து!
**அண்ணா** என்பது மூன்றெழுத்து!
**தம்பி** என்பது மூன்றெழுத்து!
**தங்கை** என்பது மூன்றெழுத்து!
**தாத்தா** என்பது மூன்றெழுத்து!
**பாட்டி** என்பது மூன்றெழுத்து!
இவர்கள் காட்டும் **அன்பு**ம் மூன்றெழுத்து!

எமது தாய் மொழி **தமிழ்** மூன்றெழுத்து!
நாம் சுவாசிக்கும் **காற்று** மூன்றெழுத்து!
**வாழ்வு** மூன்றெழுத்து!
வாழ்வை மாற்றிய **கொரனா** மூன்றெழுத்து!
**உதவி** என்பது மூன்றெழுத்து!
அதற்கு சொல்லும் **நன்றி**யும் மூன்றெழுத்து!

## நான் விரும்பும் மாற்றம்

சில இடங்களில் ஆறு, ஏரி, குளம் போன்ற நீர் நிலைகள் இருக்கும். அதில் நிறைய குப்பைகள் இருக்கும். நாம் குப்பைகளை போடக்கூடாது.

நாம் குப்பைகளை நீர் நிலைகளில் போட்டால் அது நீரின் அடியில் செல்லும். சில விலங்குகள் நீர்த் தாவரங்களை உண்ணும். அந்த விலங்குகள் குப்பைகளை சாப்பிட்டு விடும்.

நாம் நீரில் இரசாயனங்களை போட்டால், நீர் அசுத்தம் ஆகும். அதை திரும்பவும் பயன்படுத்த முடியாது. விலங்குகள் அந்த நீர் நிலையில் நீர் குடித்தால், அவையும் பாதிக்கப்படலாம். நீர் தாவரங்கள் இந்த நீரை பயன்படுத்தும் போது, அது பாதிக்கப்படலாம்.

குப்பைகள் நீரில் மட்டுமல்ல அது நீர் நிலைக்கு அருகில் இருக்கும் போது அதிலிருந்து துர்நாற்றம் வீசும். அது வளி மண்டலத்தை மாசாக்குகிறது.

நீர் மிகவும் அசுத்தமாக இருந்தால், நோய்கள் ஏற்படலாம். விலங்குகளும் பறவைகளும் நீர்த் தாவரங்களும் பாதிக்கப்படும். அப்போது நமக்கு உணவு கிடைக்காது. எனவே நாம் குப்பைகளை நீர் நிலத்துக்குள் போடக்கூடாது. இதுதான் நான் விரும்பும் மாற்றம்.

# திருக்குறள் சொல்லும்
## மனம் (Mind), பகுத்தறிவு (Intellect), சித்தம் (Wisdom)

-அ. அருட்சோதி
(ஓய்வு பெற்ற விமானப் பொறியியலாளர்)

**திருக்குறள்**
தமிழரின் வாழ்வின் கருவூலம்.
**இக் கட்டுரையின் நோக்கம்**

உணர்ச்சி வசப்பட்டு ஆழ்ந்த சிந்தனை தெளிவு அற்று செயல்படும் தன்மையுடைய மனத்தை (mind) கட்டுப்படுத்தி எச்செயலையும் பகுத்தறிவின் மூலம் (intellect, not intelligence) தெளிவு பெற்று செயலாற்ற வேண்டும். அப்படி தெளிந்த அறிவு (பகுத்து + அறிதல்) மூலம் செயலாற்றினால் ஏற்படும் விளைவு மகிழ்ச்சியானதாகவும், உயர்ந்த பலனையும் கொடுக்க கூடியதாகவும் இருக்கும். முழு வெற்றி கிட்டாத போதிலும் தோல்வி நேரிடாது. பகுத்தறிவு (பகுத்து + அறிதல்) எதையும் நடுநிலையாகவும் ஆழ்ந்த ஆராய்ச்சி மூலமும் (Logic and reasoning) முடிவு எடுக்கும் திறனை தரவல்லது.

**திருக்குறள் சொல்லும் மனம், அறிவு, சித்தம்**

- **மனம்**

மனதின் தன்மையானது வேகம், உணர்ச்சிவசப்படல், மனக்கிளர்ச்சி, ஆசாபாசம், குழப்பம், பயம், கோபம், விருப்பு, வெறுப்பு இவைகளை அடிப்படையாகக் கொண்டது. மேலும் மனமானது வெளியுலக விடயங்களை ஐம்புலங்கள் மூலம் கிரகிக்கின்றது. அதாவது மனமானது கல்வி மூலமான கருத்துக்களையும் பெற்றோர், ஆசிரியர்கள், சுற்றத்தார் போன்றவர்களின் கருத்துக்களையும் உள்வாங்குகிறது. மனம் இவை எல்லாவற்றையும் உள்வாங்கி, ஆழ்ந்த சிந்தனைத் தெளிவுற்று, சுயநலம், உலக இன்பங்களையும் அடிப்படையாக கொண்டு முடிவு எடுத்து செயல்படும் தன்மை உடையது. அது மனிதனை துன்பம், துயரம் மன வேதனைக்கு உள்ளாக்குகின்றது. அது மனிதனை நிம்மதி அற்ற நிலைக்கும், பாவம் செய்வதற்கும் தூண்டுகிறது. மனம் "கண்டதே காட்சி, கொண்டதே கோலம்" என்ற நிலையில் செயல்படுகிறது. அத்துடன் மனம் அலைபாயும் குரங்கு போன்ற தன்மை உடையது. "மனம் ஒரு குரங்கு" என்று ஒரு கவிஞன் பாடியுள்ளான். ஆகவே மனித வாழ்க்கையில் துன்பத்தை தவிர்க்க வேண்டும் என்றால் மனிதனிடம் உள்ள பகுத்தறிவைப் பயன்படுத்த வேண்டும். மனதிற்குக் கிடைக்கும் எவ்விடயத்தையும் பகுத்தறிவின் மூலம் ஆராய்ந்து தெளிவு பெற்று செயல்படுத்த வேண்டும்.

- **பகுத்தறிவு**

பகுத்தறிவு என்பது ஒரு மனிதன் மனதில் உள்வாங்கிய விடயங்களை மட்டுமே கொண்டு முடிவெடுக்காமல், மனதைக் கட்டுப்படுத்தி, முடிவுகளை ஆராய்ந்து செவ்வனே எடுக்க வல்லது. பகுத்தறிவிற்கு சுதந்திரமாக சிந்திக்கும் ஆற்றல், தர்க்க

சாஸ்திர முறையில் ஆராயும் தன்மை உள்ளது. பகுத்தறிவு ஒரு செயலிற்குரிய காரணங்களை, பக்கசார்பற்று நடுவுநிலைமை மற்றும் ஆழ்ந்த சிந்தனைகளின் மூலம் அறியவல்லது. பகுத்தறிவை பலப்படுத்தினால் ஒரு மனிதனுடைய சிந்தனை ஆற்றல் தெளிவாக இருக்கும். ஆகவே எவ்விடயம் சிறியதோ அல்லது பெரியதோ மனதைக் கட்டுப்படுத்தித் தெளிந்த முடிவை எடுக்க வேண்டும்.

- மனம் மட்டும் எம் முடிவையும் எடுத்து செயல்படுத்த அனுமதிக்காதே!
- உனது வாழ்க்கையில் முடிவு எடுத்துச் செயல்படுத்தும் பலத்தை விட்டுவிடு
- சுருங்கச் சொல்வதானால், பௌதிகநிலை, உணர்ச்சிநிலை, ஆணவநிலை, சமயநிலை எல்லாவற்றையும் பகுத்தறிவு கட்டுப்படுத்தி செயல்பட வேண்டும்.

**உதாரணம்**

ஒரு அலுவலகத்தில் எப்படி ஒரு எழுதுவினைஞர் மேலதிகாரிக்குக் கட்டுப்பட்டு செயற்படுகின்றாரோ, அதைப் போலவே மனமும் பகுத்தறிவிற்குக் கட்டுப்பட்டு செயற்பட வேண்டும். அப்படி செயற்பட்டால் விளைவுகள் மகிழ்ச்சியாகவும் உன்னதமாகவும் அமையும். பகுத்தறிவின் பலம், மனதைக் கட்டுப்படுத்தி செயல்களை சிறந்த முறையில் செயல்படுத்தும் தன்மை உடையதாக இருக்கவேண்டும். ஆகவே பகுத்தறிவை உரிய முறையில் சிறு பிள்ளையில் இருந்து வளர்க்க வேண்டும்.

Intellect has the ability to think and make reasoning. If you develop strong intellect, your thinking will be clear, your decision will be precious and your judgement will be perfect. The physical body should only be guided by our intellect, not by our mind.

❖ **சித்தம்** **(Wisdom)**

மனத்தை பகுத்தறிவின் மூலம் கட்டுப்படுத்தி, அறிவாற்றலுடன் கூடிய தெளிவாக முடிவெடுக்கும் திறனை சித்தம் என்பர். மன விருப்பமும் (மகிழ்ச்சியை அடிப்படையாக கொண்டது), பகுத்தறிவின் மூலம் பெற்ற அறிவுத் தெளிவும் சேர்ந்து செயற்படும்போது, மகிழ்ச்சியும், சிறந்த உயர்வான செயலும் கைகூடி, வெற்றியைக் கொடுக்கும். சமய சம்பிரதாய நிகழ்வுகளுக்குள் எத்தனையோ தத்துவ உண்மைகள் மறைந்திருக்கும். ஆனால், இன்றைய காலகட்டத்தில் கேளிக்கைகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுப்பதால், இத்தகைய நிகழ்வுகளில் மறைந்து இருக்கின்ற உண்மையை உணர்ந்து செயலாற்றுவது அரிதாகவே காணப்படுகிறது. இதே போல சகல செயல்களிலும் உண்மைகள் மறைந்து இருக்கின்றது. இதில் தெளிவு பெற்று செயல்பட்டால் வாழ்வு ஆனந்தமாக இருக்கும்.

***குறிப்பு:-*** தத்துவம் அற்ற வழிபாடு ஒரு மூடநம்பிக்கை. வழிபாடு அற்ற தத்துவம் (உண்மைகள்) ஒரு மனப்பிரம்மை. Religion without philosophy is fanaticism. Philosophy without religion is mental speculation. Therefore, in a nutshell, the intellect must govern and guide the mind and body at all times.

**திருக்குறள் விளக்கம்**

**"கற்க கசடற கற்றவை கற்ற பின்**
**நிற்க அதற்கு தக"**

கற்கத் தகுந்த நூல்களாகிய திருக்குறளும், ஔவையார் எழுதிய நல்வழி, ஆத்திசூடி, கொன்றை வேந்தன் போன்றனவும் அறநூல்களே. இவைகளை தெளிவாக ஆராய்ந்து கற்க வேண்டும். மற்றும் சமயம், தத்துவம், விஞ்ஞானம், பாடசாலைக்கல்வி, பெற்றோர், பெரியவர்களின் உபதேசம் போன்றவற்றையும் அறிந்து தெளிதல் வேண்டும். அதில் கூறப்பட்டவற்றை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல், மனம், பகுத்தறிவு மற்றும் சித்தம் மூலம் ஆராய்தல் வேண்டும். ஆராய்ந்து பகுத்தறிவு எடுக்கும் முடிவிற்கு மனம் கட்டுப்பட்டு செயலை செய்ய வேண்டும். பகுத்தறிவின் முடிவே இறுதியானதாக இருக்க வேண்டும்.

**"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு**
**கற்றனைத் தூறும் அறிவு"**

மணலில் ஆழமாக நீர் சுரக்கின்றது. அதை மேலும் மேலும் ஆழமாகத் தோண்டினால் அதிக நீர் கிடைக்கும். அது போல எவ்விடமாயினும், சமயக்கல்வி, பாடசாலைக்கல்வி, பெற்றேர், பெரியோர்களின் அறிவுரை இவைகளை கேட்டு மனம், பகுத்தறிவு மூலம் ஆராய்ந்து தெளிவு பெற வேண்டும். அதன் முடிவு பகுத்தறிவின் பலம் கூடிய உயர்வான முடிவாக இருக்க வேண்டும். பகுத்தறிவு எடுக்கும் முடிவு நடுநிலையாகவும், தெளிவானதாகவும், நன்மையை கொடுக்கக் கூடியதாகவும் அமையும். ஆகவே தெளிவான முடிவு கிடைத்த பின் அதை மனம், பௌதிக உடம்பு இவைகளினால் செயல்படுத்தினால் வெற்றி, மகிழ்ச்சி கிடைக்கும்

**"சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ**
**நன்றின்பால் உய்ப்பது அறிவு"**

உலக இன்பங்களை அடிப்படையாகக் கொண்டு வாழ வழிகாட்டும் மனத்தை, அலைபாய விடாமல், பகுத்தறிவின் மூலம் கட்டுப்படுத்தி, சரியான பாதையில் செயல்படுத்தும் வல்லமை பகுத்தறிவிற்கு உண்டு. பகுத்தறிவின் பலத்தை உயர்த்தி, எமது மனதை கட்டுப்படுத்தும் வல்லமை எம்மிடம் உண்டு. அதன் மூலம் சாந்தி சமாதானம், மன அமைதியான வாழ்வை ஏற்படுத்தலாம். இதுதான் கிருஷ்ணபரமாத்மா அர்ச்சுனனுக்கு பார்த்தசாரதியாக இருந்து தேர் ஓட்டிய தத்துவ உண்மை.

- குதிரைகள் - மனம் - ஐந்து புலன்கள்
- தேர் - உடம்பு - வாழ்க்கை
- தேர்ப்பாகன் - அறிவு (பகுத்தறிவு)
- கடிவாளங்கள் - மனம்

தேர்ப்பாகன் செவ்வனே செயற்படாமல் இருந்தால், கடிவாளம் தளர்ந்து குதிரைகள் தாம் நினைத்தபடி சென்று தேரை நிர்மூலம் செய்துவிடும். அதுபோல் பகுத்தறிவு எனும் கடிவாளம் மூலம் ஐந்து புலன்களையும் கட்டுப்படுத்தாது விட்டால் வாழ்க்கை அழிந்துவிடும்.

குறிப்பு:- பகுத்தறிவின் பலத்துடன் மனதைக் கட்டுப்படுத்தி, செயல்களை செவ்வனே செயல்ப்பட வைத்தால் வாழ்க்கையை அமைதியுடனும், சகல சந்தோசத்துடனும் வாழலாம். அது மட்டும் அல்ல, வாழ்க்கையில் வரும் கஷ்ட நஷ்டங்களை மிகச் சுலபமாக கடக்கலாம்.

**"எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு"**

எவ்விடயத்தையும் கல்வி அறிவின் மூலமோ, கருத்துரை மூலமோ, ஞானிகள் மூலமோ அல்லது சமய நூல்கள் மூலமோ அறிந்தாலும், அவற்றை நாம் எம் மூலம் ஆராய்ந்து ஏற்றுக்கொள்ள வேண்டும். எடுக்கப்படும் தீர்மானம் எமது அறிவிற்கு (பகுத்தறிவிற்கும்) ஏற்புடையதாக இருக்க வேண்டும். அச்சம், கலாசாரம், பெரியவர் அல்லது சமயவாதிகள் சொன்னார்கள் என்று ஏற்றுக் கொள்ளக் கூடாது.

***உதாரணங்கள்:-***

சமய கதைகளில், தத்துவ உண்மைகள், காலத்தின் தாக்கம் எழுதுபவரின் கற்பனை திறன் பொதிந்திருக்கும். ஆகையால் அது நூறு சதவீதம் உண்மை என்று ஏற்றுக் கொள்ளக் கூடாது. அநேகமான சமயக் கதைகள், உண்மைத் தத்துவங்களை சாதாரண மக்களுக்கு விளக்குவதற்காக எழுதப்பட்ட கற்பனைக் கதைகளாக இருக்கலாம். அதனால்தான் எங்கள் இந்து சமயத்தில் ஒரு குறிப்பு உண்டு. "இந்து சமயத்தில் சொல்லப்பட்ட அல்லது எழுதப்பட்ட எக் கருத்தும், இந்து சமயத்தின் மூலமாகிய வேதங்களுக்கு முரண்பாடாக இருந்தால் அதை ஏற்றுக் கொள்ளாமல் விடலாம்."

பகவத்கீதையில் கிருஷ்ண பரமாத்மா அர்ச்சுனனுக்கு செய்த உபதேசம் (18வது அத்தியாயம், 63வது சுலோகம்) "இந்த ஞானமே இரகசியத்தின் இரகசியம். அது உனக்கு உபதேசிக்கப்பட்டது. குறைவற ஆராய்ந்து (ஆழமான பகுத்தறிவின் மூலம்) தெளிவு பெற்று உன் இஷ்டப்படி செய்". இங்கு கிருஷ்ண பரமாத்மா அர்ச்சுனனுக்கு சுதந்திரமாக செயல்படும் உரிமையைக் கொடுக்கிறார்.

கௌதம புத்தர் தனது கருத்தில் குறிப்பிட்டது பின்வருமாறு,

- பெரியவர்கள் சொல்கிறார்கள் என்பதற்காக சரி என்று ஏற்காதே
- கலாசாரத்தில் இருந்து வருகிறது என்பதற்காக சரி என்று ஏற்காதே
- சமயங்கள் சொல்கிறது என்பதற்காக சரி என்று ஏற்காதே
- பழமை வாய்ந்த கருத்து என்பதற்காக சரி என்று ஏற்காதே

அதனால் எவ்விடயமானாலும் பகுத்தறிவு மூலம் (காரண, காரிய, நடுவுநிலைமை) ஆராய்ந்து ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**"எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்**
**மெய்பொருள் காண்பது அறிவு"**

ஒவ்வொரு பொருளிற்கும் தனித்தன்மை உண்டு. உதாரணமாக அக்கினி சுடும் மற்றும் எரிக்கும் தன்மை உடையது. தண்ணீர் குளிரும் தன்மையுடையது. சிங்கம்

பயங்கரமான தன்மை உடையது. கத்தி வெட்டும் தன்மை உடையது. அத்துடன் ஆயுதங்கள் அழிவை ஏற்படுத்தும் தன்மையுடையவை. இதைப்போலவே இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு வகையான பொருட்களுக்கும் உயிரினங்களுக்கும் (மனிதனைத் தவிர) பொதுத் தன்மை உண்டு. இவைகளின் தன்மை பொதுவாக மாறுபடாதவை (objective). ஆனால் மனிதர்கள் ஒவ்வொருவரும் தனித்துவம் (Individuality) உள்ளவர்கள். அத்துடன் அவர்கட்கு பகுத்தறியும் தன்மையும், மாறுபடும் தன்மையும் உண்டு. அவர்களின் சிந்தனை (மனம், பகுத்தறிவு) மாறுபடும். இதனால் ஒவ்வொரு மனிதனும் ஒரு விடயத்தை, ஒரு செயலை அல்லது ஒரு பொருளை வித்தியாசமான மனோநிலையில் பார்க்கும் தன்மையைக் கொண்டவன் (subjective), ஆகவே இவற்றைப் பற்றிய ஒவ்வொரு மனிதனதும் எண்ணங்களும், கருத்துகளும் வேறுபட்டதாக அமையும். மேலும், இதனால் ஏற்படும் அனுபவங்களும் (experience) மாறுபட்டவையாக இருக்கும்.

Objective Facts + Subjective Feelings = Experiences gained. இதை உணர்ந்து இவ்வுலகிலுள்ள எல்லா மனிதர்களும் தம்மை சுற்றியுள்ள மனிதர்களையும் இதர உயிரினங்களையும் அத்துடன் இயற்கையையும் புரிந்து வாழ்ந்தால், இவ்வுலகில் சாந்தி, சமாதானமான வாழ்வு நிலவுவதுடன் பூகோளச் சமநிலையும் பேணப்படும்.

**"எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு**
**அவ்வது உறைவது அறிவு"**

கடவுள் என்று சொல்லப்படுகின்ற பிரபஞ்ச நியதி அல்லது உண்மை, மாற்றம் இல்லாதது இது இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என இம் முக்காலத்தையும் கடந்து நிலையாக நிற்பது. ஆனால் பிரபஞ்சமும் அதில் உள்ள எல்லாப் பொருட்களும் பிறப்பு, இறப்பு (அழிவு) மற்றும் தோற்றம் மறைவிற்கு உட்பட்டவை. நாம் வாழும் உலகமும் மாற்றங்கட்கு உட்பட்டது. உதாரணமாக சூழல், மனித மனங்கள், பூகோள அரசியல், சமயம், விஞ்ஞானம், காலநிலை போன்ற யாவற்றிலும் மாற்றம் ஒன்றே மாறாதது. ஆகவே மனிதர்கள், மிருகங்கள், தாவரங்கள் போன்றவை உலகத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு அமைவாக வாழப் பழகவேண்டும்.

**தொகுப்பு:-**

மனம் இறந்த கால நினைவுகளை மீட்டி குழப்புவதோடு, எதிர்கால நிகழ்வுகளைக் கற்பனையாக கொண்டும் குழப்பும் தன்மை உடையது Mind is worried over what happen in the past and anxious about what will happen in the future. பகுத்தறிவுக்கு நன்மை / தீமை, விருப்பு / வெறுப்பு என்பவற்றை தெளிவாக ஆராய்ந்து சுயமாக சிந்தித்து முடிவு எடுக்கும் தன்மை உள்ளது. ஆகையால், அத்தகைய முடிவு பக்கச் சார்பற்று நடுநிலை உடையதாய் இருக்கும். மனம், தெளிந்த அறிவு என்பவற்றைப் பிரதி பலிப்பதாக சித்தம் அமையும். ஒருவருக்கு இம் மூன்றும் வாழ்க்கையின் மூன்று படிகள். மனம், பகுத்தறிவு, சித்தம் இவைகளை அடிப்படையாக கொண்டு தெளிவான முடிவுகளை பெற்று குறைவின்றி செயல்களை செய்து மகிழ்ச்சியாக வாழலாம்.

# என்.ஜி.கே (NGK) பட விமர்சனம்

-துவாரகன் சந்திரன்

நடிப்பின் நாயகன், சூர்யா நடித்து, செல்வராகவன் இயக்கிய, 'என்.ஜி.கே' (NGK) ஒரு மிக பிரம்மாண்டமான அரசியல் படம். இந்தப் படத்தில், நந்த கோபாலன் குமரன் என்ற சமூக சேவகர் தனது கிராமத்திற்கு உதவ அரசியலில் சேர நிர்பந்திக்கப்படுகிறார். ஆனால் அரசியலின் தந்திரங்களை கற்றுக்கொள்ளும் போது அவர் பல்வேறு தடைகளை எதிர்கொள்கிறார். அந்த தடைகளை எப்படி கடந்து வந்து, ஒரு அதிகாரத்துக்கு வருகிறார் என்பதே இந்தப் படத்தின் கருவாகும். இந்தப் படத்தில் உள்ள சில காட்சிகளையும் , விடயங்களையும் மட்டும் எடுத்து அதில் இருக்கும் ஆழமான கருத்துக்களை முன்வைக்கிறேன்.

மிக சுவாரசியமான விடயங்களை இயக்குனர் செல்வராகவன் சிறிதாக சில இடங்களில் வைத்திருக்கிறார். உதாரணத்திற்கு, சூரியாவின் கதாபாத்திரத்தின் பெயரிலலேயே உள்ளது. 'NGK' அதாவது, நந்த கோபால கிருஷ்ணன் என்ற பெயர், இந்து மத கடவுளாகிய கிருஷ்ணரை குறிக்கின்றது. இந்த விடையத்தை நான் ஏன் முன்வைகின்றேன் என்றால், மகாபரதத்தில் இரு அணிகள் இருப்பதை நாம் எல்லோரும் அறிவோம், ஒரு பக்கம் பாண்டவர்கள் மறுபக்கம் கௌரவர்கள் என பிரிந்திருக்கும். அந்தக் காலகட்டத்தில், கௌரவர்கள் தான் ஆட்சியில் இருந்தார்கள். இதனால், கிருஷ்ணர் சில பல சூழ்சிகளை செய்து, பாண்டவர்களை வெற்றியடைய வைத்து, கௌரவர்களை அழித்தார். இதே போல் 'என்.ஜி.கே' படத்தில், இரண்டு பெரிய கட்சிகள் இருக்கும், எதிர்கட்சி ஆகிய KMK கட்சியும், ஆளும்கட்சியும். முதலில், அடிமட்ட தொண்டனாக இருந்து, அரசியல் சூழ்ச்சிகளை படிப்படியாக கற்றுக்கொண்டு, இந்த இரு கட்சிகளை கடந்து, அந்த கட்சிகளின் தலைவர்களையும் அழித்து, முதல் அமைச்சராக மாறுகின்றார்.

அடுத்ததாக, 'NGK' என்னும் பெயருக்கும் முன்னால் முதல் அமைச்சர் MGRக்கும் பொருத்தம் உள்ளது. இரு பெயரிலுள்ள எண்ணிக்கையும், நடுவிலுள்ள 'கோபால்' என்பதையும் தவிர்து, MGR படங்களில் நடித்துக்கொண்டு இருக்கும் போதும், அரசியலுக்குள் வந்த பிறகும், மக்களுக்கு நிறைய உதவிகள் செய்துள்ளார். இதே போல், NGK யும் சில இளைஞர்களுடன் சேர்ந்துகொண்டு, தனது ஊர் மக்களுக்கு நன்மைகள் செய்துகொண்டிருப்பார். மேலும் 'கிரி' என்னும் அரசியல்வாதி, என்.ஜி.கே யைப்பார்த்து, "உன்னை மாரி ஆளுங்கல்லாம் அரசியலுக்கு வந்தா எவ்வளோ நல்லா இருக்கும்" என்று கூறுவார். இந்த காட்சியில் சூரியாவுக்கு பின்னால் ஒரு MGR விளம்பர பனர் ஒன்று இருக்கும். இதன் இருப்பிடத்தின் பொருள், என்.ஜி.கேயின் அரசியல் பாதையை முன்னறிவித்தல் செய்கிறது.

இப்படி பல மறைக்கப்பட்ட விடயங்கள் இந்தப் படத்தில் உள்ளது. எனவே இந்தப் படத்தை பார்க்காதவர்கள் இந்த படத்தை பார்க்கும் படி மிக பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

# பெண்கள் உலகின் கண்கள்

*-சுரபி தர்மசீலன்*

உலக மக்கட்தொகையில் ஏறத்தாழ பாதி பெண்கள். அவர்கள் சமூகத்தில் பல பாத்திரங்களை வகிக்கிறார்கள். கடந்த காலங்களை நோக்கினால், பெண்கள் முதன்மையாக குழந்தைகளைப் பராமரிப்பவர் அல்லது வீட்டைக் கவனிப்பது மற்றும் அதை சுத்தம் செய்வது போன்ற பாத்திரங்களை எடுத்துள்ளனர். ஆனால் இப்போது பெண்கள் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் பிற ஆண் ஆதிக்கம் செலுத்தும் பகுதிகளிலும் பங்கு வகிக்கின்றார்கள். பெண்கள் ஆற்றிய இந்த பாத்திரங்கள் வாழ்க்கைக்கு மிகவும் முக்கியமானவை.

சமுதாயத்தில் பெண்கள் வகிக்கும் ஒரு முக்கிய பங்கு கவனிப்பாளர்களாக இருப்பது. ஆண்களுடன் ஒப்பிடும் போது, பெண்கள் மென்மையானவர்களாகவும், அதிக பொறுப்புள்ளவர்களாகவும், குழந்தையை வளர்ப்பதில் வல்லவர்களாகவும் கருதப்படுகிறார்கள். ஒரு குழந்தையின் வாழ்க்கையில் ஒரு தாயின் இருப்பு என்பது மனஅழுத்தம், மற்றும் உணர்ச்சி ஒழுங்குமுறை ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பை வழங்குகிறது, இவை இரண்டும் ஆரோக்கியமான மூளை வளர்ச்சி மற்றும் குழந்தையின் எதிர்கால நல்வாழ்வுக்கு முக்கியமானவையாகும். ஒரு குழந்தை தன் தாயின் மூலம் உலகம் எவ்வாறு செயற்படுகிறது என்பதைக் கற்றுக்கொள்கிறது. குழந்தையின் தாயிடம் எல்லா தகவல்களும் உள்ளன; அவளுடைய அன்பு, இரக்கம், மன்னிப்பு, மனிதநேயம், சமத்துவம், மரியாதை, தாராள மனப்பான்மை மற்றும் நெறிமுறைகளிலிருந்து குழந்தைகள் கற்றுக்கொள்கிறார்கள். ஒரு தாய் என்பவள் உணர்ச்சிகளின் கலவையாகும். அவை ஒரு குழந்தைக்கு சிறந்த ஆசிரியரை உருவாக்குகின்றன.

தொழிலாளர் தொகுப்பில் பெண்கள் வகிக்கும் பங்கு மிக முக்கியமானது. குறிக்கோள்களை அடைய அல்லது ஒரு திடமான பணியிட உறவை உருவாக்கும்போது, பெண்களின் இரக்க குணம், உள்ளுணர்வினால் நன்மை தீமைகளை அறியும் திறன் மற்றும் நம்பிக்கை போன்ற திறன்கள் அவர்கள் பணிபுரியும் நிறுவனத்திற்கு பயனளிக்கும். நிபுணர்களின் கூற்றுப்படி, ஆண்களை விட பெண்கள் காட்சி, வாய்மொழி மற்றும் உணர்ச்சி காரணிகளுக்கு மிகவும் திறம்பட பதிலளிப்பவர்களாக உள்ளனர். பெண்கள் ஆண்களை விட அணித் தலைவர்களாக சிறப்பாக செயல்படுகிறார்கள், அவர்களின் உணர்ச்சி இயல்பு சொல்லாத வார்த்தைகள் அல்லது உணர்ச்சிகளைப் புரிந்துகொள்ள உதவுகிறது. இந்த குணத்துடன், எந்தவொரு

பணியிட பிரச்சினைகளும் பதற்றங்களும் தோன்றுவதற்கு முன்பே அவற்றை அடையாளங்கண்டு தீர்க்கக் கூடியவர்களாக பெண்கள் இருக்கின்றார்கள்.

“பெண் இன்றி பெருமையும் இல்லை, கண் இன்றி காட்சியும் இல்லை" என்பது ஒரு பழமொழி ஆகும். பெண் இல்லாத உலகம் ஒரு முழுமையான உலகமாக இருக்காது. பெண் இல்லாத வீடு வீடாக இருக்காது. பெண் இல்லாமல், குழந்தைக்கு அம்மாவில்லை, கணவனுக்கு மனைவி இல்லை. பெண்கள் நம் வாழ்வில் முக்கியமானவர்கள். பெண்கள் இல்லாமல் ஒன்றுமில்லை. அவர்களே உலகின் கண்கள்.

## பெண்ணின் பெருமை

-துர்க்கா முகுந்தன்

கல்தோன்றா மண்தோன்றா
காலத்தில் தோன்றிய எங்கள்
தமிழ் மொழியை வணங்கி
பெண்ணின் பெருமையை
பொறுமையாக
எழுதுகின்றேன்.

பெண்ணின் பெருமையை
பெரியார் கூறிச் சென்றுவிட்டார்
பாரதியே பாரெல்லாம்
பாடிச் சென்றுவிட்டார்.
ஆனால் இன்று
பெண்ணின் பெருமையை
பாடிட பாரினிலே யாருமில்லை.
மாந்தர் தம்மை இழிவுபடுத்தும்
மடமைதனை கொழுத்துவோம்
மாதவம் செய்து மாதவராய்
பிறந்திட்டோம்.
படைத்திடுவோம் சாதனை.

சாதனை செய்து சரித்திரம் படைத்திட்ட
பெண்மணிகளாம் கண்மணிகளும் பெண்களே

இந்தியாவையாண்ட இரும்புப்பெண்
இந்திராகாந்தியும் பெண்தான்
இலங்கையை ஆண்ட
ஸ்ரீமாவும் பெண்தான்
அவரின் மகள்
சந்திரிகாவும் பெண்தான்

இஸ்ரேலை ஆண்ட
கோல்டா மேயரும் பெண்தான்
கவிபாடிய கவிக்குயில்
சரோயினி நாயுடும் பெண்தான்
வீரம் படைத்திட்ட
வீரமங்கை வேலு நாச்சியும் பெண்தான்
மாவீரம் செய்திட்ட
வீரப்பெண் ஜான்சி ராணியும் பெண்தான்
தியாகத்தின் முதல் மாவீரப்பெண்
கப்டன் மலதியும் பெண்தான்
தமிழீழத் தாகத்தால் தண்ணீர்
மட்டும் அருந்தி
தன்னை ஆகுதியாக்கிய
அன்னை பூபதியும் பெண்தான்.

பெண் என்றால் அன்பு
பெண் என்றால் பாசம்
பெண் என்றால் கருணை
பெண் என்றால் தெய்வம்
பெண் என்றால் மென்மை
பெண் என்றால் பெருமை
என்று பெருமை கொள் பெண்ணினமே
அதனை புரிந்துகொள்
எம் இனமே

விண்ணாள மண்ணாள
பெண்ணால் முடியும்
விழித்தெழு பெண்ணே

# கர்வபங்கம் - உருவகக் கதை

-நவாஜி

சூரியனும் மெதுவாக மேலெழுந்து தன் பயணத்தை ஆரம்பிக்கும் இரம்மியமான காலை நேரம், அன்று பாடசாலைகளும் விடுதலை நாளாக இருந்தமையால் சிறுவர்கள் சிலர் ஒன்று சேர்ந்து பூங்காவைச்சுற்றி விளையாடிக் கொண்டிருந்த காரணத்தினால் பூங்காவும் கலகலப்பாக காணப்பட்டது. பூங்காவுக்கு மேலும் அழகூட்டுவது போன்று ஒரு பஞ்ச வர்ணக் கிளியொன்றும் அங்குள்ள மரக்கிளையொன்றில் வந்தமர்ந்து கீக்கீ எனத் தன்னால் முடிந்தவரை ஒலியெழுப்பிக் கொண்டிருந்தது. கிளியின் ஓசையினால் கவரப்பட்டு, அது அமர்ந்திருந்த மரக்கிளையின் கீழ் வந்து நின்று கிளியின் குரலிலும் அதன் அழகிலும் கவரப்பட்ட சிறுவர்களும் தங்களை மறந்து தாங்கள் பாடசாலையில் பயின்ற பாடலான

“பச்சைக்கிளியே பறந்து வா, பாலும் சோறும் உண்ண வா, கொச்சி மஞ்சள் பூச வா, கொஞ்சி விளையாட வா” எனக் கோரஸாகப் பாடி மகிழ்ந்தார்கள். இவற்றைக் கண்ணுற்ற ஒரு வழிப்போக்கனாக அவ்வழியே நடந்து வந்த கவிஞன் ஒருவனும் கிளியின் அழகிலும், அங்கிருந்த சூழ்நிலையிலும் மயங்கி அக்கிளியை நோக்கி ஒரு கவிதையைப் பாடி விரைந்து அவ்விடம் விட்டகன்றான். சிறுவர்களின் பாடலினாலும் கவிஞனின் கவிதையிலும் தன் அழகைப் பற்றிய கர்வம் மேலிட சுற்றுமுற்றும் பார்த்த கிளிக்கு அப்போதுதான் தானமர்ந்திருக்கும் மரக்கிளையின் மறுபக்கத்தில் வந்தமர்ந்த காகம் கண்ணில் தென்பட்டது. உடனே தன் அழகை நினைத்து கர்வத்திலே திளைத்திருந்த கிளியானது காகத்தை நோக்கி “ஏ மூடக் காகமே என் அழகைப் பங்கப்படுத்தவா என் அருகே வந்தமர்ந்திருக்கின்றாய், உடனடியாக இந்த இடத்தை விட்டுப் போய்விடு” எனச் சத்தம் போட்டது. ஒன்றுமறியாத காகமும் எதுவும் கூறாமல் அவ்விடம் விட்டுப் பறந்து சென்றது.

இவ்விடயம் நடந்து சில நாட்களின் பின்னர் பறந்து கொண்டிருந்த காகத்துக்கு ஒரு மனிதன் “கா கா” எனத் தன் வீட்டிலிருந்து அழைப்பது கேட்டது. கீழே நோக்கிய காகத்துக்கு அந்த மனிதன் ஒரு வாழை இலைத் துண்டில் சிறிது சோறு, கறி வடைத்துண்டு எனத் தன் மூதாதையர் யாருக்கோ படையலிட்டுத் தான் சாப்பிடுவதற்கு முன்பதாகத் தன்னை அழைப்பது தெரிந்தது. உணவைக் கண்ட காகமும் வழக்கம் போன்று பயமின்றி அந்த உணவின் முன் பறந்து செனறமர்ந்து தன் அலகினால் கொத்திச் சாப்பிடத் தொடங்கியது. காகம் அமர்ந்து சாப்பிடுவதைக்கண்ட அம்மனிதனும் தானழைத்தவுடன் இன்றைக்கு காகம் வந்து சாப்பிடுவதைக் கண்டு மகிழ்ந்து தன் முன்னோர்களை நினைத்து காகம் சாப்பிடும் திசை நோக்கித் தன் இரு கரம் கூப்பி வணங்கிய பின்னர் தன் வீட்டினுள்ளே சென்று மறைந்தான். சந்தோஷத்துடன் சாப்பிட்டுக் கொண்டிருந்த காகத்துக்கு ஏதோ ஒரு

பறவை ஈனக்குரலில் அழும் குரல் கேட்டது. உற்றுக் கேட்ட காகத்துக்கு அக்குரல் அம்மனிதனின் வீட்டுக்கு பக்கத்தில் அமர்ந்திருந்த ஓலைக் குடிலிலிருந்து வருவதை அவதானித்தது. உடனே சாப்பிடுவதை நிறுத்திவிட்டு அது யாது பறவை என அறியும் நோக்கத்துடன் அத்திசை நோக்கிப் பறந்தது. அங்கே கம்பிகளாலான ஒரு சிறிய கூண்டிலே ஒரு பஞ்சவர்ணக் கிளியொன்று அதன் இறகுகள் பறக்க முடியாதவாறு வெட்டப்பட்டு சோர்ந்து போய்க் காணப்பட்டது. மிகவும் பரிதாபத்துடன் அக்கூண்டினருகே சென்றமர்ந்த காகம் மிகவும் ஆதரவாக "நண்பரே என்ன நடந்தது எப்படி இக்கூண்டில் வந்து அகப்பட்டாய்" என வினவியது. ஆதரவுக் குரலுடன் தன்னை விசாரிக்கும் காகத்தைக் கண்ட அக்கிளி மிகவும் ஆறுதலடைந்து தன்னை இம்மனிதன் துன்புறுத்துவதாகக் கூறியது. அதன் வார்த்தையைக் கேட்ட காகம் "உனது குரலை எங்கோ முன்பு கேட்டிருக்கின்றேன். என்னை நீ அறிவாயா" எனக் கேட்டது. காகத்தினை உற்று நோக்கிய அக்கிளியானது நினைவு கொண்டு " ஆம் நண்பரே, சில தினங்களுக்கு முன் எனது கர்வத்தினால் நான் உங்களைத் திட்டியது எனக்கு நினைவுள்ளது. அன்று எனது கர்வத்தினால் உங்களை ஏசிவிட்டு அழகின் மமதையில் பறந்து சென்ற நான் கவனிக்காது ஒரு வேடன் விரித்த வலையில் அகப்பட்டுக் கொண்டேன். என்னைப் பிடித்த வேடனோ பணத்துக்கு என்னை இந்த வீட்டு மனிதனுக்கு விற்றுவிட்டான். வாங்கிய இக்கல் நெஞ்சனோ நான் பறந்து விடாமல் இருபதற்காக என் இருபக்க இறகுகளையும் அரிந்து இக்கூட்டில் அடைத்து வைத்துத் தினசரி என்முன் வந்து வணக்கம் சொல்லு நன்றி சொல்லு என மாறி மாறி எதையாவது சொல்ல வைத்து தொல்லைப் படுத்துகின்றான். நான் அவன் கூறுவதைச் சரியாகக் கூறாதுவிட்டால் அன்று எனக்கு தண்ணீர், சாப்பாடு எதுவும் தரமாட்டான். எல்லாம் என் கர்வத்தின் மமதையினால் ஏற்பட்டது. தயவு செய்து நான் உங்களைத் திட்டியதற்காக என்னை மன்னித்து விடுங்கள். உங்கள் அன்பான உள்ளத்தை நான் அறியத் தவறிவிட்டேன். அழகை முன் நிறுத்திக் குணத்தைக் கொள்ளத் தவறிவிட்டேன். என்னை மன்னித்துவிடுங்கள்" என அரற்றத் தொடங்கியது.

ஆறுதல் கூறிய காக்கையானவர் அங்கிருந்து பறந்து சென்று தனக்காக அவ்வீட்டுக்காரனால் வைக்கப்பட்டிருந்த உணவிலிருந்து வடைத் துண்டை தன் அலகினால் தூக்கிவந்து கிளியிருந்த கூட்டினூடாக உட்செலுத்தி கிளியை சாப்பிடும்படி கூறியவண்ணம் அதன் கூண்டை மூடிப் பூட்டியிருந்த கதவின் ஆணியை மேலிழுத்து கிளியை விடுதலை பெறச்செய்யும் முயற்சியில் இறங்கியது. இதைக்கண்ணுற்ற கிளி "இந்த முயற்சியை கைவிடுங்கள். நீங்கள் என்னை இதிலிருந்து விடிவித்தாலும் சிறகில்லாத காரணத்தால் என்னால் பறக்க முடியாது. தவிர இங்கே கீழே சுற்றித்திரியும் பூனைக்கு நான் இரையாகிவிடுவேன். தற்போதைக்கு இக்கூண்டுதான் எனக்குப் பாதுகாப்பானது. மீண்டும் எனது சிறகுகள் முளைக்கத் தொடங்கியதும் முயற்சிக்கலாம்" எனக் கூறியது. அப்போது காகமும்

“நண்பரே நீங்கள் கூறியதுதான் சரியானது. நீங்கள் இந்த வீட்டுக்காரன் கூறும் சொற்களைப் பேசப்பழகி அவனிடம் நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்துங்கள். நானும் அடிக்கடி உங்களுக்கு தேவையான பழங்களை என்னால் முடிந்தளவு எடுத்துவந்து உங்களை பார்த்துப் போவேன்: எஅன ஆறுதல் வார்த்தைகளைக் கூறி அவ்விடமிருந்து பறந்து சென்றது.

காகத்தின் ஆறுதலான வார்த்தைகளினால் ஆறுதல் கொண்ட கிளியும் காகத்துக்கு விடை கொடுத்து அனுப்பிவைத்தது. அதன் உள்ளத்திலே காகத்தின் செயல் மனிதர்கள் கூறும் திருக்குறள் ஒன்றை அந்த நேரத்தில் நினைவூட்டியது, “இன்னா செய்தாரை ஒருத்தல் அவர்நாண நன்னயம் செய்துவிடல்”

# விடுதலை

-லோகிதன் கலைச்செல்வன்

விடுதலை! விடுதலை!! விடுதலை!!! என்ற பாரதியாரின் பாடலுக்கு ஏற்ப மெல்போன் நகரம் கோவிட் தாக்கத்தில் இருந்து விடுதலை பெற்றது.

மெல்போன் நகரில் கோவிட் தொற்று அதிகரித்த காரணத்தால் எமது முதல்வர் பல அவசர கால சட்டங்களை அறிமுகப்படுத்தினார். மாணவர்கள் பாடசலைக்கு சென்று கல்வி கற்க முடியவில்லை. மாணவர்கள் வீட்டிலே கணணி மூலம் கற்றனர். நண்பர்கள், உறவினர்களை சந்திக்க முடியவில்லை. மக்கள் ஒரு மணித்தியாலம் மட்டுமே வெளியே செல்லக் கூடியதாயிருந்தது.

இப்பொழுது முதல்வர் சட்டங்களை குறைத்துள்ளார். மக்கள் தற்போது சுதந்திரமாக வேலைகளை செய்கின்றனர். மெல்போன் திறந்தவெளி சிறைச்சாலையில் இருந்தும் கோவிட்டில் இருந்தும் விடுதலை பெற்றது.

# உயர்ந்த பாலத்தில் விரிந்த பார்வை.

-கவின் சத்தியசுதன்

நான் உயர்ந்த பாலத்திலிருந்து ஓர் பரந்த சாலையை பார்க்கிறேன்
அங்கே வாகனங்கள் விரைவாக சென்றுகொண்டு
காற்று வீசிக்கொண்டு
காற்றில் புகை மணந்துகொண்டு
மரங்கள் அசைந்துகொண்டு..... என் காட்சி விரிகிறது.

இந்த வாகனங்கள் புகையை கக்குகிறது. இந்த புகை ஓர் கிரீன்ஹவுஸ் வாயு ஆகும். இது வான்வெளிக்கு சென்று பூமியின் வளிமண்டலத்தில் இருந்து சூரியனின் வெப்பத்தை பூமிக்குள் அடக்கி வைத்திருக்கும் இதுவே உலக வெப்பமயமாதலுக்கு வழிவகுக்கிறது.

இவ்வாறு தொடர்ந்தால் வெகுவிரைவில் உலக உயிரினங்கள் அழிய நேரிடும். நாங்கள் இதனை குறைக்கும் நடவடிக்கைகளில் உடனடியாக இறங்க வேண்டும். இலகுவான, அனைவருக்கும் முடிந்த வழி வாகனங்களில் செல்லுவதை குறைத்து அதிகம் நடக்க முயற்சி செய்தல். இல்லாவிட்டால் மிதிவண்டியில் செல்லுதல். இவை உடல்நலத்திற்கும் பயன் தரும். அடுத்து மின்சக்தியில் இயங்கும் வாகனங்களை புகை குறைவாக கக்கும் வாகனங்களை பாவித்தல். தயவுசெய்து இவ்விடயங்களை செய்து உலகத்தை காப்பாற்றுங்கள்.

எங்கள் வாழ்க்கை வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது. வாகனங்களைப் போல் இங்கே அங்கே என்று போய்க்கொண்டே இருக்கின்றோம். சாப்பிடவே நேரமிருப்பதில்லை. ஒரு போதும் நாங்கள் ஒன்றும் செய்யாமலிருப்பதில்லை. ஆனால் இன்றைய தொற்றுநோய் சூழல் எங்கள் வாழ்க்கை முறையையே மாற்றி வைத்தது. வாகனங்கள் வேகமாக போவதை பாலத்தின் மேல் நின்று பார்த்து உணர்வதைப்போல் இதைப் பார்த்து எங்கள் வாழ்க்கையை மாற்றினோம்.

எல்லோருக்கும் பிரச்சனை வரும். இது யாருமே தடுக்க முடியாது. இது மற்றவர்களால் தீர்க்கவும் முடியாது. ஆனால் உங்கள் பிரச்சனைகளை எளிதாகப் பார்க்க நீங்கள் செய்யக்கூடிய ஒன்று உள்ளது. அது ஓர் உயர்ந்த பாலத்திலிருந்து அந்த பிரச்சனையை பார்க்க வேண்டும். இப்படிச் செய்தால் உங்கள் வழியாக பார்க்காமல், நீங்கள் சூழலிலிருந்து விலகி வெளியே பார்க்கின்ற ஓர் ஆள் மாதிரி பார்க்கலாம். இது உங்கள் பிரச்சனையை புரிவதற்கும் தீர்க்கவும் உதவும்.

அந்த உயர்ந்த பாலத்தில் இருக்கும் போது இப்படி பல விடயங்கள் என் மனதில் தோன்றியது.

# அம்மாவின் "ஒரு ஊர்ல ஒரு ராஜகுமாரி"

-அ.மேரி இக்னேசியஸ்

இந்த நல்ல நாளில் இளவேனிலோடு உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி. "எழுத்து ஏற்றம் தரும்". ஆம். தாய்மை பொறுப்புணர்ந்து செயல்படும் அனைத்துத் தாய்மார்களுக்கும் என்னுடைய இந்த எழுத்துப் பதிவைக் காணிக்கையாக்குகிறேன்.

ஈன்ற புறந்தந்து தன்தலையாய கடனை முடித்துவிட்ட பின்பு தாய்மைக்கென்று எந்தவொரு கடமையும் இல்லையா? உண்டு.

தாய்மை என்பது வரம். அந்த வரம் முழுமை பெறவேண்டுமென்றால் ஆயுளுக்கும் அதைத் தாங்கி நடைபோட வேண்டும். குழந்தைகள் தான் நம்மைக் காட்டும் கண்ணாடி. இன்றளவும் அவர்களைக் கொண்டே சுற்றமும் நட்பும் நம்மை அடையாளம் காணுகிறது எனலாம்.

வளர்ந்து வரும் உலகச் சூழலில் குழந்தைகளின் உலகம் எண்ணிலடங்கா இன்னல்களைச் சந்திக்கின்றது என்றே கூற வேண்டும். நாளுக்கு நாள் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்த வண்ணமே உள்ளன. முன்பு கூட்டுக் குடும்பங்களில் குழந்தைகளின் பாதுகாப்பு ஓரளவு உறுதிசெய்யப்பட்டது. தாத்தா-பாட்டி, மாமன்-அத்தை, சித்தி-சித்தப்பா என ஒரு உறவுப் பட்டாளமே குழந்தைகளைக் கொண்டாடியது. குழந்தைகளிடம் தவறுகளைக் கண்டவிடத்து மென்மையாய் கண்டிக்கவும் செய்தது. குழந்தைகள் அங்கேயே பாராட்டையும் கண்டிப்பையும் அடையாளம் கண்டனர்.

நாகரிக முதிர்ச்சி அடைந்துவிட்டோம் என்று நாம் மார்தட்டிக்கொள்ளும் இன்றைய சூழலில் தேர்வில் தோல்வி, பெற்றோர் கண்டிப்பு, ஏன் - தொலக்காட்சிக்காகக் கூட தன் வாழ்க்கையை முடித்துக் கொள்ளும் அவலநிலையே - அறிவிலி நிலையே மேலோங்கி நிற்கிறது.

கல்வி எதைக் கற்றுத் தந்தது? வாழக் கற்றுத் தரவேண்டிய கல்வியில் இந்த கோழைத்தனம் எங்கிருந்து வந்தது. கல்வியோடு கைகோர்த்து குடும்ப உறுப்பினர்களும் குழந்தைகளுக்காய்ச் சில பொறுப்புக்களைக் கையில் எடுத்தே ஆக வேண்டிய சூழல் தான் இன்று நிலவுகிறது.

எந்தெந்த முறைகளில் குழந்தைகளை வளர்ப்பது என்பதில் வேண்டுமானால் வேறுபட்ட கருத்துக்கள் இருக்கலாமேயொழிய அவர்களை நல்லவர்களாக நாடு

போற்றும் வல்லவர்களாக வளர்க்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமேயில்லை.

குழந்தைகளுக்கும் நமக்குமான இடைவெளி அதிகரிப்பது அவர்களுக்கு ஆபத்தை உருவாக்கக்கூடும் என்பதை நாம் உணர வேண்டும்.

காலையிலிருந்து மாலை வரை பள்ளி, மாலை வீடு திரும்பியதும் வீட்டுப்பாடம், பின்பு உறங்கச் செல்லும் வரை கைபேசி அல்லது தொலைக்காட்சி என்பதே இன்று பல வீடுகளில் குழந்தைகளின் அன்றாட நிகழ்வுகள்.

இன்னும் சில வீடுகளில் உறக்கத்தின் போதே குழந்தைகள் பெற்றோரை சந்திக்கின்றனர். இச்சூழ்நிலையை எப்படிக் கையாள்வது? எதைக் கொண்டு குழந்தைகளை வழிநடத்துவது? என்ற வினாக்கள் நம்மனதில் எழாமல் இல்லை.

நம் மனதில் எழும் இது போன்ற கேள்விகளுக்கு ஒரு பதில் உண்டு. **கதைகள்.**

ஆம். நம் மூத்த தலைமுறையினரால் நமக்குக் கொடுக்கப்பட்ட மிகப் பெரிய சொத்து; நாம் நம் குழந்தைகளுக்குக் கொடுக்கத் தவறிய சொத்து - கதைகள் தான்.

சிவாஜியை வீரசிவாஜியாக்க அவருடைய அன்னை கைகளில் எடுத்தது கதைகளைத்தான்.

கதைகளின் வழி நன்னெறிக் கருத்துக்களை குழந்தைகளின் மனதில் ஆழமாய் விதைக்க முடியும். குழந்தைகள் விருட்சமாய் வளரும் போது விதையின் நன்னெறி வீரியம் நிச்சயமாய் விருட்சத்திலும் இருக்கும்.

இன்று விளையாட்டின் வழிக்கல்வி என்பதைச் சாத்தியமாக்கிக் காட்டியுள்ளனர். அப்படியென்றால் பொழுதுபோக்கு கூறுகளில் கதைகளைக் கலந்து குழந்தைகளிடமிருந்து நல்ல நடத்தைகளை அறுவடை செய்யமுடியும் என்பதும் சாத்தியமே. "நான் ஏன் இதைச் செய்யவேண்டும்" என்று விவாதிப்பதை விடுத்து "நான் ஏன் இதைச் செய்யக்கூடாது" என்று உள்ள உறுதியுடன் நமக்கான பொறுப்புக்களை ஒப்புக்கொள்ள வேண்டும்.

அன்னையாய் நம் பொறுப்புணர்ந்து எத்துனை இக்கட்டான சூழ்நிலையிலும் குழந்தைகளுக்காக நேரத்தை ஒதுக்க வேண்டும். குழந்தைகளின் உலகம் மிகவும் அழகானது. மிகவும் தனித்தன்மை வாய்ந்தது. அவர்களையும் மதித்து அவர்களது கருத்துக்களுக்கும் செவிசாய்க்கும் போது அவர்களுக்கு நம் மேல் மதிப்பு தோன்றக்கூடும். இந்தச் சூழ்நிலையை இன்னும் எளிமையாக்கி பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் உறவுப்பாலமாய் அமைந்து பயன் விளைவிப்பன கதைகளே.

அவர்களுக்காய்ச் சேமிப்பதைவிட நல்ல மனிதர்களாய் அவர்களைச் சேமிப்பதே நம் தலையாய கடன். **<u>கதைகளால் இது சாத்தியமே.</u>**


வாருங்கள் தொடங்குவோம்... “ஒரு ஊர்ல ஒரு ராஜகுமாரி....”

அனைவருக்கும் தைத்திருநாள் வாழ்த்துக்கள்.








கூடைப்பந்து

எனக்கு கூடைப்பந்து விளை-யாட விருப்பம். நான் எனது நண்பர்களோடு விளையா-டுவேன். நான் மூன்று-புள்ளிக் கோட்டில் நின்-று பந்தைக் கூடைக்குள் எறிவேன். எங்களது வீ-ட்டுப் பின்முற்றத்தில் கூடைப்பந்துக் கம்பம் இருக்கிறது. நான் அப்பா-வுடன் அதிலே விளை-யாடுவேன். நீங்களும் என்னோடு விளையாடுங்கோ.

-கே. ஆரன்



# ராம்...

-ஆரணன் மதியழகன்

ராமைப் போல் வேறொரு நண்பனைப் பார்க்க முடியாது. என் உயிர்த் தோழன். முதல் முறை சந்திக்கும்போது, எனது எண்ணம் மோசமாயிருந்தாலும், இரண்டு வருடத்தில் பிரிக்கமுடியாத நண்பர்களானோம். எப்பவும் பிரச்சனையிருந்தால் வந்து நிற்பான். ஆரம்பத்தில் நான் பணக்கார குடும்பத்தில் வளர்ந்ததும், அவன் ஏழையான குடும்பத்தில் வளர்ந்ததால், நான் நினைத்தேன் என் பணத்திற்காக நண்பனாகினார், ஆனால் அவன் ஒரு நாளும் பணம் கேட்கவில்லை. அவனை போலல்லாமல் எனது மற்ற நண்பர்கள் பணத்திற்காக எனது தோழர்களாக இருக்கிறார்கள். எனது பெற்றோர்களின் வருமானத்தை தெரிந்து எப்பவும் பணத்தை கேட்பார்கள்.

அன்றும் வழமையாக நான் போய் பள்ளிக்கூடத்திற்கு வெள்ளிக்கிட்டு எல்லோரும் என் வீட்டிலிருந்து சென்றோம். போகும்போது ஒருவர் வழி கேட்டார். காட்டும்போது ஒரு வண்டி எம் பின்னால் நின்று மூவர் என்னை கடத்த பார்த்தார்கள். ராமை தவிர எனது மற்ற நண்பர்கள் உயிருக்காக ஓடினார்கள், ஆனால் ராம் நிண்டார். ராம் நிண்டு தமது உயிர் ஆபத்திலிருக்கிறது என்று நினைக்காமல் சண்டைப்பிடித்தான். இருவர் என்னை இழுக்கும்போது ராம் ஒருவரை அடித்து வீழ்த்தினான். பயம் காட்டவில்லை. தைரியம் அவரின் இரத்ததில் ஓடியது. திரும்பவும் ஒரு அடி அடித்து என்னை இழுத்தான், ஆனால் இன்னொருவர் அவனை தள்ளிவிட, ராம் ஓடினான். ஏன் ஓடினான் என்று தெரியாமல் கவலைப்பட்டேன்.

சிறிது நேரத்தில் இருட்டில் எழுந்தேன். இருக்கும் கூண்டில் ஒரு வெளிச்சம் இருந்தது. கையில் கைவிலங்குகள் கட்டியிருந்தன. மூச்சு வேகமாக மாறி, கண்கள் கலங்கின. நான், “தயவுசெய்து என்னை விடுங்களேன்! தயவுசெய்து விடுங்களேன்!” கத்தினேன். திடீரென காலடிச் சத்தம் கேட்டது. ஒருவர் கூண்டை திறந்து உள்ளே வந்தான், ஆனால் ஒரு பேச்சும் இல்லை. இரும்பு தடியை தூக்க… ஒரு பழகிய குரல் கேட்டது. முதலில் கனவு காண்கிறேன் என்று நினைத்தேன், ஆனால் மனம் சரியானதுடன், ராம் உண்மையாக என் முன்னால் நிண்டது கண்டேன். கூண்டிலிருந்து வெளியே செல்ல உதவி செய்து, கட்டடத்தின் வெளியே கூட்டிக்கொண்டுப் போனான். சூரியன் ஒளி வெளிச்சம் என் கண்ணை எரித்தது. அப்பிரகாசம் என் மனதை பலமிலக்கச் செய்து நான் மயங்கி விழுந்தேன். ஒரு நாள் முழுவதும், ராம் என் பக்கத்திலிருந்து பார்த்துக்கொண்டான். அடுத்த நாள் மருத்துவமனையில் எழுந்தேன். ராம்,” அடை! எப்படி இருக்கிறாய்? இப் பெரிய பிரச்சனை எனக்கு கவலையாயிருந்தது.” என்று கூறினார். குழப்பமான நான்,” அப்ப ஏன் ஓடினாய்?” என்று கேட்டேன்.

ராம்,” கடத்தும்போது, அவர்கள் உனது தொலைப்பேசியை எடுத்ததை கண்டேன். இதனால் நான் ஓடி என் தொலப்பேசியை உன் காற்சட்டைக்குள் வைத்து,

வெளிக்கிட்டேன். ஒரு நிமிடம் நிண்டு, என் திட்டதைப் பற்றி யோசித்து காவல்துறையிற்கு ஓடினேன். அங்கே உன் பெற்றோரைக் கூப்பிட்டு, அவர்கள் காவல்துறையிற்கு வந்து, எல்லோரும் என் தொலைப்பேசியை பாவித்து உன் இடத்தை கண்டுப்பிடித்தோம். அதிலிருந்து அந்த மூவர் வெளிய வர காத்திருந்து உன்னை காப்பாத்தினோம்.”

என்னால் ஆச்சரியத்தில் கதைக்க முடியவில்லை, ஆனால் என் பெற்றோர் கதைத்தார்கள். ராமிடம் நன்றி கூறி, அழுது அவன் காலில் விழுந்து கடவுளைப் போல் வணங்கினார்கள். அத்துடன், நான் கட்டிலிலிருந்து இறங்கி, ராமை கட்டிப்பிடித்து கதறி அழுதேன். இப்படியான ஒரு நண்பனை முந்தி எங்கையும் பார்க்கவில்லை.

## எங்கள் தமிழ் பாடசாலை

-சபரீசன் முகுந்தன்

எங்கள் தமிழ் பாடசாலை
இனிய நல்ல பாடசாலை

நரேவரன் தெற்கில் அமைந்து
ஞாயிறு தோறும் காலை
எம்மை மகிழ்விப்பது
எங்கள் தமிழ் பாடசாலை

தமிழ் சிறுவர்கள் எங்களை
தமிழ் பேச வைப்பதும்
எங்கள் பாடசாலை
தமிழை நாம் கற்று
தமிழன் என்று சொல்லி
தமிழனாய் எம்மை
தலைநிமிர வைப்பதும்
எங்கள் தமிழ் பாடசாலை

வாழ்க எங்கள் பாடசாலை
வளர்க எங்கள் தமிழ் பாடசாலை

## அம்மா

-பவித்திரன் முகுந்தன்

அம்மா என்றால் அன்பு

அம்மா என்றால் பாசம்

அம்மா என்றால் கருணை

அம்மா என்றால் நேசம்

அம்மா என்றால் பொறுமை


அம்மா என்றால் உண்மை

அம்மா என்றால் அகிலம்

அம்மா என்றால் கோயில்

அம்மா என்றால் தெய்வம்

# எனது இலங்கைப் பயணம்




ஒவ்வொருவருடமும் நான் எனது அம்மா, அப்பாவுடன் இலங்கைக்குப் போவது வழக்கம். கடந்த வருடம் நான் எனது தம்பியுடனும் அம்மாவுடனும் சென்றேன். அப்பா வேலை காரணமாக எங்களுடன் வரவில்லை.

விமானநிலையத்தில் எனது தம்பி ஓடி விளையாடத் தொடங்கினான். நானும் அவனுடன் சேர்ந்து ஓடினேன். அம்மா கோபமாக என்னைப் பார்த்தார். நான் அம்மாவின் அருகிலே ஓடிச் சென்றேன். தம்பியும் எனது அருகில் வந்தான். சிறிது நேரத்திலே நாங்கள் விமானத்தினுள் ஏறினோம். விமானப் பணிப்பெண்கள் எங்களுக்கு உதவி செய்தார்கள். அவர்கள் எம்மை ஆசனத்தில் அமர்ந்து இருக்கைப்

பட்டையை அணியுமாறு கூறினார். எனது தம்பி அம்மாவின் அருகில் இருந்தான். திடீரென எனது தம்பி விம்மி விம்மி அழத் தொடங்கினான். நான் சிறுவர் பாடல் ஒன்றைப் பாடினேன். அம்மா தனது தொலைபேசியை அவனிடம் கொடுத்தார். அவனது அழுகை கோபமாக மாறியது. இதைக் கண்ட விமானப் பணிபெண் ஒரு சிறிய விளையாட்டுப் பொருள் ஒன்றைக் கொடுத்தார். சிறிது நேரத்தில் அவன் தூங்கிவிட்டான். விமானப் பணிப்பெண் எமக்கு உணவு கொண்டு வந்து தந்தார். நான் மகிழ்ச்சியாகச் சாப்பிட்டேன். அதன் பின் நானும் உறங்கிவிட்டேன். சுமார் பத்து மணித்தியாலப் பயணத்தின் பின்னர் நாங்கள் இலங்கையைச் சென்று அடைந்தோம். இந்த வருடம்

COVID-19 காரணமாக நான் இலங்கைக்குப் போகவில்லை. ஆனாலும் இந்த நினைவுகளை நினைத்துப் பார்ப்பதில் சந்தோசம் அடைகிறேன்.





\- சுபகா. சுதர்சன் (Grade 2)
பாரதி பள்ளி, Berwick.

# இளவேனில் கடந்து வந்த பாதை




July 2012







January 2014

